# விதிகள்

## அஸோஸியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ்

## சேமலாப நிதி

லேக் ஹவுஸ்

கொழும்பு.

டெய்லிநியூஸ் அச்சகம்

## அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ்

# சேமலாப நிதி

## விதிகள்

### 1. பெயர்:

இந்த நிதி (ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தெட்டு ஏப்ரல் பன்னிரண்டாம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது) "அஸோஸியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் சேமலாப நிதி" என்றழைக்கப்படுவதோடு, அதன் நிர்வாகம் அனைத்தும் தற்சமயத்திற்கு கொழும்பில் இதற்கப்புறம் குறிப்பிடப்படும் கம்பனி காரியாலயத்தில் நடைபெறும்.

### 2. விளக்கம்:

நிதி விதிகளின்படி, சூழ்நிலையோ அல்லது பொருளோ கோராவிடில்:-

(i) ஒருமையைக் குறிக்கும் வார்த்தைகள் மட்டுமே பன்மையையும், எதிர்மறையையும் உள்ளடக்கும். அத்துடன் ஆண்பாலைக் குறிக்கும் வார்த்தைகள் மட்டுமே பெண்பாலையும், எதிர்மறையையும் உள்ளடக்கும்;

(ii) "கம்பனி" எனும்போது, 1938-ம் வருட 51-ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் இணைக்கப்பட்டதும், கொழும்பு, லேக் ஹவுஸில் பதிவுக் கந்தோரை உடையதுமான அஸோஸியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஆப் சிலோன் லிமிட்டெட் நிறுவனத்தையே குறிக்கும்;

(iii) "சபை" எனும்போது தற்சமயம் கம்பனி இயக்குநர்கள் சபையையே குறிக்கும்;

(iv) "சட்டம்" எனும்போது 1958ம் வருட 15-ம் இலக்க ஊழியர் சேமலாபநிதிச் சட்டத்தையும், தற்சமயம் அமுலிலிருக்கும் ஏதேனும் சட்ட ரீதியான திருத்தங்களையும், அதன் கீழ் செய்யப்

பட்டு தற்சமயம் அமுலிலிருக்கும் ஏதேனும் சட்ட திட்டங்களையுமே குறிக்கும்;

(v) ''ஊழியர்'' எனும்போது சட்டத்தின்படி பொருந்தக்கூடிய ஊழியராகவுள்ள (இலங்கையில் கம்பனியின் நிரந்தர சேவையில் பணியாற்ற நியமிக்கப்பட்டவராக இருக்க வேண்டும்) ஒரு ஆளையே குறிக்கும். நிதியில் அங்கத்துவம் வகிக்க தகுதியில்லையென சபையினல் குறிக்கப்படும் எந்த இயக்குநரையுமோ அல்லது ஊழியர் எவரையுமோ உள்ளடக்காது; ''அங்கத்தவர்'' எனும்போது 8வது விதியின் பிரகாரம் நிதியில் அங்கத்துவம் வகிக்க அனுமதிக்கப்படும் ஒரு ஊழியரையே குறிக்கும்;

(vii) ''வருவாய்'' எனும் வார்த்தை, சட்டத்தின் 47வது பிரிவில் குறிக்கப்பட்ட ''வருவாய்'' எனும் வார்த்தைக்குக் கொடுக்கப்பட்ட அதே பொருளையே குறிக்கும்;

(viii) ''மாதச் சம்பளம்'' அல்லது ''தினசரிச் சம்பளம்'' எனும்போது (இதுகாறும் ஊதியம் என்று மட்டுமே குறிக்கப்பட்டுவந்த இது தினசரி, மாதச் சம்பளம் மற்றும் அலவன்ஸுகளுக் கிடையிலுள்ள வித்தியாசத்தை விளக்கவே அனுமதிக்கப் பட்டது) அடிப்படை மாதச் சம்பளம் அல்லது அடிப்படை தினசரிச் சம்பளத்தையே குறிக்குமே தவிர தனிப்பட்ட அலவன்ஸ், போனஸ், கமிஷன், ஓவர்டைம், பஞ்சப்படி அல்லது வேறேதேனும் அலவன்ஸ் அல்லது வேறு வழிகளில் கிட்டும் வருமானத்தையோ அன்றியும் ஊதியத்தையோ உள்ளடக்கமாட்டாது;

(ix) ''குழு'' எனும்போது 5வது விதியில் குறிப்பிடப்பட்ட நிதி நிர்வாகக் குழுவினையே குறிக்கும்;

(x) ''விதிகள்'' எனும்போது இந்த விதிகளையோ அல்லது தற்சமயம் அமுலிலிருக்கும் நிதி விதிகளையோ குறிக்கும்;

(xi) ''இந்த விதிகளின் திகதி'' எனும்போது 1962;

(xii) ''பொறுப்பாணர்கள்'' எனும் போது தற் சமயம் நிதியில் 13 (i) விதியின்கீழ் உள்ள காப்பற வாணர்களையே குறிக்கும்.

## 3. நோக்கங்களும் நிதி வருடமும் (i)

நிதியின் நோக்கம் சிக்கனத்தைக் கைக்கொள்ள ஊக்கப்படுத்துவதாகும்; அத்துடன் நிதி விதிகளுக் கமைய ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒரு தொகைப் பணம் வழங்குவதாகும்; வழங்கப்படும் பணமும் நேரமும் விதிகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்படும்.

(ii) நிதியின் நிதி வருடம் டிசம்பர் 31ம் திகதி யுடன் முடிவடையும் அல்லது அவ்வப்போது குழு தீர்மானிக்கும் இதர திகதிகளில் முடிவடையும்.

## 4. விதிகளின் திகதி

முன்பு அமுலிலிருந்த நிதி விதிகளின் 28வது சட்டத்திற்கிணங்க உருவாக்கப்பட்ட இந்த 1962 யூலாய் 25ம் திகதியிட்ட விதிகள் யாவும், 1963 யூலாய் 25ம் திகதியன்று நடைபெற்ற அங்கத்தவர் விசேஷ பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. முன்பிருந்த எல்லா விதிகளுக்கும் பதிலாக உருவாக் கப்பட்ட இந்த விதிகள் 1959, ஜனவரி 1ம் திகதி முதல் அமுலாக்கப்படுவதாக கணிக்கப்படுகின்றது.

## 5. குழு (i)

இந்த விதிகளின் திகதிக்கப்புறம் சபையானது அவ்வப்போது கம்பனி நிர்வாக இயக்குநர்களில் ஒருவரை, நிதித் தலைவராகவும், நிர்வாகக் குழுத் தலைவராகவும் நியமிக்கும். அன்னார் இதற்கப்புறம் குறிப்பிடப்படும் நியமன குழு—அங்கத்தவர்களில் ஒருவராக விருப்பார்.

(ii) இந்த விதிகள் அங்கீகரிக்கப்பட்ட திகதியி லிருந்து, நிதியின் விஷயங்களும் அலுவல்களும்

பத்தொன்பது பேர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவின் கட்டுப்பாட்டிலும் ஆட்சிப் பொறுப்பிலும் இருக்கும். நிர்வாகக் குழு முப்பிரிவுகளைக் கொண்டிருக்கும். அவையாவன:-

**(அ) நியமன குழு—அங்கத்தவர்கள் (பணித்துறைச் சார்பாக)**

மேற் சொல்லிய உப-விதியின் (i)ன் கீழ் சபையினுல் நிர்வாக இயக்குநர் நியமிக்கப்படுவார், கம்பனி இயக்குநர் ஒருவர் அவ்வப்போது சபையினுல் நியமிக்கப்படுவார், தற்சமயம் கம்பனி காரியதரிசி, மற்றும் தற்சமயம் கம்பனி உதவிக் காரியதரிசி;

**(ஆ) நியமன அங்கத்தவர்கள்:**

ஒவ்வொரு வருடாந்த நிதிப் பொதுக் கூட்டத்தின் போதோ அல்லது அதற்குப் பின்னரோ வருடா வருடம் சபையானது ஆறு அங்கத்தவர்களை நியமிக்கும்;

**(இ) தேர்வுக் குழு—அங்கத்தவர்கள்:**

வருடாந்த நிதிப் பொதுக் கூட்டத்தின்போது கூடியிருக்கும் அங்கத்தவர்களால் ஒன்பது அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்;

சபை தீர்மானத்தின் பிரதியொன்று, கம்பனி காரியதரிசியினுலோ அல்லது சபைத் தலைவராலோ உண்மையான ஒரு பிரதியென அத்தாட்சிப்படுத்தப்படும் பட்சத்தில், அது மேற்படி (அ) பிரிவு (ஆ) பிரிவுக்கான எந்த நியமனத்திற்கும் அமர்வுக்கும் போதுமான சான்ருகும்.

(iii) இவ்விதிகள் திகதியன்று நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் வருமாறு:

(அ) நியமன குழு அங்கத்தவர்கள் (பணித்துறைச் சார்பாக)
(ஆ) நியமன குழு—அங்கத்தவர்கள்.
(இ) தேர்வுக் குழு—அங்கத்தவர்கள்.

இவர்களில் (ஆ) பிரிவிலுள்ள நியமன குழு—அங்கத்தவர்களும், தேர்வுக் குழு அங்கத்தவர்களும் 1963ம் வருடத்தில் நடைபெற விருக்கும் முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம்வரை பதவி வகிப்பர். இக்கட்டத்தில் அன்னார் பதவி காலம் முற்றுப்பெறுமெனினும், மீண்டும் தேர்ந்தெடுப்பதற்கு தகுதியுடையவராவர்.

(iv) (ஆ) பிரிவிலுள்ள ஒவ்வொரு நியமன—குழு அங்கத்தவரும், அன்னார் நியமிக்கப்பட்டதற்கப்புறம் நடைபெறும் வருடாந்தப் பொதுக் கூட்டம் வரை பதவி வகிப்பார். இக்கட்டத்தில் அவர் பதவிக் காலம் முற்றுப்பெறுமெனின் மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராவார். ஒவ்வொரு தேர்வுக் குழு அங்கத்தவரும், அன்னார் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கப்புறம் நடைபெறும் வருடாந்தப் பொதுக் கூட்டம் வரை பதவி வகிப்பார். இக்கட்டத்தில் அவர் பதவிக் காலம் முற்றுப் பெறுமெனினும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவராவார். எக்காரணங் கொண்டும் (ஆ) பிரிவிலுள்ள எந்த நியமன குழு அங்கத்தவரோ அல்லது எந்த தேர்வுக் குழு அங்கத்தவரோ, நிதி அங்கத்துவத்திலிருந்து விலகிக் கொள்ளும் பட்சத்தில், அத்தகையோர் குழு அங்கத்தவர் பதவியிலிருந்தும் விலகிக் கொண்டதாகவே கருதப்படும்.

(v) (ஆ) பிரிவிலுள்ள ஒரு நியமன குழு—அங்கத்தவரோ அல்லது தேர்வுக் குழுவிலுள்ள ஒரு அங்கத்தவரோ இறந்துபோனல் அல்லது குழுவிலிருந்து இராஜிநாமாச் செய்தால் அல்லது நிதி அங்கத்துவப் பதவியிலிருந்தோ அல்லது கம்பனிச் சேவையிலிருந்தோ விலகிக் கொண்டால் அல்லது (தொடர்ந்து மூன்று குழுக் கூட்டங்களுக்கு சமூகந்தரத் தவறினுல்) சமயா சமய பதவியொன்று காலியாகிவிட்டதென குழு ஊர்ஜிதப்படுத்தும்.

(ஆ) பிரிவிலுள்ள ஒரு நியமன குழு—அங்கத்தவர் பதவி காலியானால், சபையானது அவ்விடத்திற்கு வேறொரு அங்கத்தவரை நியமிக்கும். தேர்வுக் குழுவில் ஒரு அங்கத்தவர் பதவி காலியானால், குழு அங்கத்தவர்களே அவ்விடத்திற்கு வேறொரு அங்கத்தவரை நியமனஞ் செய்வர். காலியான இடத்திற்கு இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள், அடுத்து நடைபெற விருக்கும் வருடாந்தப் பொதுக் கூட்டம் வரையும் மட்டுமே பதவியிலிருப்பார்கள். இக்கட்டத்தில் இவர்களின் பதவிக் காலம் முற்றுப் பெறுமெனினும், மீண்டும் நியமனஞ் செய்யப்படுவதற்கோ அல்லது தேர்ந்தெடுக்கப் படுவதற்கோ தகுதியுடையவராவர்.

(vi) குழுவானது அவசியப்படும் போதெல்லாம் கூடுமெனினும், மூன்று மாதத்திற்குக் குறையாமல் ஒரு தடவை கூடி ஆற்றவேண்டிய கருமங்களை முறையாக ஆராய்ந்து முடிவு செய்யும். குழுக் கூட்டங்களுக்குத் தலைவரோ அல்லது அவர் இல்லாத பட்சத்தில், சபையால் நியமனக் குழு—அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ள இயக்குநரோ தலைமை வகிப்பார். இவர்கள், இருவருமே இல்லாதபட்சத்தில், சமூகந்தந்துள்ள இதர குழு அங்கத்தவர்கள், பணித்துறைச் சார்பாக நியமன—குழு அங்கத்தவராகவுள்ள மற்றவரை கூட்டத்திற்கு தலைமை வகிப்பதற்குத் தேர்ந்தெடுப்பார்கள். தலைமை வகிப்பவர், குழு அங்கத்தவர் என்ற ஹோதாவில் ஒரு வாக்கும் தலைவர் என்ற ஹோதாவில் ஒரு வாக்கும் அளிக்க உரிமை உடையவராவார். குழு கூட்டங்களின்போது, அலுவல்கள் நடவடிக்கைகளுக்கு ஒன்பது பேர் கோரம் ஆகும்.

(vii) குழு அங்கத்தவர்களில் பெரும்பான்மையானோரின் தீர்ப்பே அமுலாகும். எல்லா அங்கத்தவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டியதொன்றுமாகும்; ஆனால் இவ்விதிகளில் குறிப்பிடப்படாத ஒரு விஷயம் சம்பந்தப்பட்ட தீர்மானம் எப்போ

தும் சபையின் இசைவையும் பெற்றே அமுலாதல் வேண்டும்.

## 6. குழு அதிகாரங்களும் கடமைகளும்

(i) குழுக் கடமைகளையும், நிதிக் காரியங்களையும் செவ்வனே செய்து முடிக்க தேவைப்படும் ஊழியர்களையும், நிதிக்கு ஒரு காரியதரிசியையும் வேலைக்கு அமர்த்த கம்பனியுடன் குழு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யும். இத்தகைய ஊழியர்கள் சம்பந்தப்பட்டமட்டில் செய்யப்பட விருக்கும் மாற்றங்கள்பற்றியும் கம்பனிக்கு குழு சிபார்சு செய்யும்.

(ii) நிதிக் காரியதரிசிக்கும், ஊழியர்களுக்கும் கொடுபடவேண்டிய வேதனங்களை குழுவே சிபார்சு செய்வதோடு, அன்னாருக்கு சம்பளம், போனஸ், அலவன்ஸ் மற்றும் இதர ஊதியங்கள் என்ற வகைகளில் செலவழித்த தொகைகளையும், இவர்களின் பால் நேர்ந்த நஷ்டங்களையும், கடன் பொறுப்புகளையும் கம்பனிக்குத் திருப்பிக் கொடுக்கவும் செய்யும். அதோடு அன்னாரின் சேவை துண்டித்தலையும் குழுவே கம்பனிக்கு சிபார்சு செய்யும். நிதிக் கணக்குப் பரிசோதனை அல்லது இதர பணிகளுக்கு கம்பனி செலவழிக்கும் தொகைகளையும் குழு திருப்பிக் கொடுத்துவிடும்.

(iii) கடன் வழங்குவதற்கு அங்கீகாரமளிப்பதற்கும், குழு மேற்கொள்ளவிருக்கும் ஏதேனும் ஒரு விஷயம்பற்றி பூர்வாங்க அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட உப குழுக்களை நியமிப்பதற்கு குழுவிற்கு அதிகாரமுண்டு. வழங்கப்பட்ட கடன் விபரங்களும், தயாரிக்கப்பட்ட அறிக்கைகளும் நிதிக் காரியதரிசியைக் கொண்டு, அவரின் அங்கீகாரத்தின் பேரில் அடுத்து நடைபெறவிருக்கும் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(iv) நிதிக் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்குச் செல்லும் முறை

யான செலவினங்களை குழு பொறுப்பேற்று, நிதிப் பணத்திலிருந்து அவற்றைச் செலுத்த அங்கீகாரமளிக்கும். நிதி சம்பந்தப்பட்ட கட்டண விதிகளையும், விதிகளின்படியோ அல்லது நிதி சம்பந்தப்பட்ட விஷயமாகவோ எழும் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண ஏற்படும் செலவினங்களையும், விதி நியதிகளின்படி செலுத்த வேண்டியவைகளையும் குழு செலுத்தும்.

(v) ஒவ்வொரு நிதி வருட முடிவின்போது, குழுவானது நிதிக் கணக்குகளை பரிசீலனை செய்து, வரவு-செலவு திட்டத்தில் ஏதேனும், மேலதிகத் தொகை காட்டப்பட்டிருப்பின், வருடாந்த பொதுக் கூட்டத்தில் கீழ்க் கண்டவைகளை அங்கத்தவர்களுக்குச் சிபார்சு செய்யும்:-

(அ) காரியதரிசிக்கு அல்லது நிதி ஊழியர்களுக்கு அல்லது இரு சாராருக்குமே ஏதேனும் போனஸ் வழங்கல்,

(ஆ) ரிசர்வ் அல்லது இதர கணக்கில் வரவு வைப்பதற்கு ஏதேனும் தொகை ஒதுக்கல்,

(இ) நிதி வருட தொடக்கத்தில் அங்கத்தவர்களின் பேரில் இரு பத்திகளிலும் இருக்கும் தொகைகளுக்கேற்ப விகிதாசாரப்படி பிரித்து வரவு வைப்பதற்கு ஏதேனும் தொகை ஒதுக்கல்,

(ஈ) அடுத்த நிதி வருடத்தில் எடுத்தெழுத ஒரு தொகை, மற்றும்

(உ) நிதி வருடத்தில் வரவுக்கு மேல் செலவு காட்டப்பட்டிருக்கும் பட்சத்தில், அச்செலவுத் தொகையை எக்கணக்கோடு சம்பந்தப்படுத்துவது என்பது சம்பந்தமாக அன்னாரின் சிபார்சு.

7. **காரியதரிசி:** காரியதரிசியானவர்—

(i) நிதி சம்பந்தப்பட்ட குழுக் கூட்டங்கள், வருடாந்தப் பொதுக்கூட்டங்கள், விசேஷ பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றில் நடைபெற்ற நடவடிக்

கைகளையும், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை யும் ஒரு நிகழ்ச்சிப் பதிவேட்டில் அல்லது பதிவேடு களில் குறித்து வைப்பார்;

(ii) நிதி சம்பந்தப்பட்ட சகல கணக்குகளையும் வைத்திருப்பார் அல்லது வைத்திருக்கச் செய்வார்; அத்துடன் நிதி கணக்குகள் யாவும் முறையாக பதிவதற்குப் பொறுப்பாக விருப்பார்;

(iii) நிகழ்ச்சிப் பதிவேடுகள், கணக்குப் புத்தகங் கள், இதர ரெக்கார்டுகள், தஸ்தாவேஜுகள், பிணைகள் மற்றும் நிதிச் சொத்துகள் எல்லாவற்றி னதும் பாதுகாவலுக்குப் பொறுப்பாளியாவார்;

(iv) ஒவ்வொரு வருடமும் ஜுன் 30ம் திகதியோ டும், டிசம்பர் 31ம் திகதியோடும் முடிவடையும் நிதிக் கணக்குகளின் ஐந்தொகையைத் தயாரித்து, ஜுன் 30ம் திகதியோடு முடிவடையும் கணக்குகளை சபைக்கும், குழுவுக்கும் சமர்ப்பிப்பதுடன், டிசம்பர் 31ம் திகதியோடு முடிவடையும் கணக்குகளின் ஐந்தொகையையும், வரவு-செலவறிக்கையையும் நிதி கணக்குப் பரிசோதகர்களுக்குச் சமர்ப்பித்து, அத்தகைய ஐந்தொகைக் கணக்கை,

(iv) கணக்குப் பரிசோதகர்களின் அறிக்கை யோடு கூடிய வரவு-செலவுக் கணக்குடன் குழுவின் முன் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு நிதி வருட முடிவுக்குப் பின்னும், கூடிய விரைவில் வசதிப்படும்போது, நிதியுடன் ஒவ்வொரு அங்கத்தவருக்குமுள்ள கணக்கு விபரத் தின் உண்மையான நிலையை வழக்கமான பாரத்தில் பூர்த்தி செய்தனுப்ப வேண்டும்.

## 8. அங்கத்துவம்:

(1) இந்த விதிகளை ஏற்றுக்கொண்ட நாளில் நிதி யில் அங்கத்தவராகவுள்ள ஒவ்வொரு ஊழியரும் (1958 டிசம்பர் 31ம் திகதியன்று, தகுதி நிர்ணய கால அடிப்படையிலுள்ள ஊழியர் என்ற கார

ணத்திற்காக அங்கத்தவராக ஆகாமலும், 1959 ஜனவரி 1ம் திகதி முதல் அங்கத்தவரானவர்களு மான ஒவ்வொரு ஊழியரும் உட்பட) விதிகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நிதியில் அங்கத்தவராக விருப்பார்.

(ii) இவ்விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதிக் கப்புறம், கம்பனி சேவையில் அமரும் ஊழியர்கள் இத்துடன் உள்ள முதலாவது அட்டவணைப் பாரத்திலோ அல்லது குழு நிர்ணயிக்கும் வேறேதேனும் பாரத்திலோ, குழுவிற்கு நிதியில் தங்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தனுப்ப வேண்டும். இவ்விண்ணப்பம் காரிய தரிசிக்கு சமர்ப்பிக்கப்பட்டதும், மனுதார் நிதியில் ஒரு அங்கத்தவராகச் சேர்த்துக் கொள்ளப் படுவார்.

(iii) கம்பனி சேவையில் இருக்கும் ஊழியர் எவரும் நிதி அங்கத்துவத்திலிருந்து ராஜிநாமாச் செய்யவோ அல்லது அங்கத்துவத்தினின்றும் விடுபடவோ முடியாது; ஆனல் கம்பனிச் சேவையிலிருந்து நீக்கப்பட்டாலோ அல்லது நீங்கிக்கொண்டாலோ அல்லது நிதியின் 2 (v) விதியின் கீழ் நிதி அங்கத்துவத்திற்கு தகுதியுடைமை இல்லாதபட்சத்தில், நிதி அங்கத்துவத்தினின்று உடனடியாக நீங்கிக் கொள்ளலாம்.

(iv) உள்நாட்டு வருமான வரி இலாகா ஆணையாளராலும், தொழில் ஆணையாளராலும் அங்கீகரிக்கப்பட்டு, கம்பனியினுல் இலங்கையில் நியமிக்கப்பட்ட வேறு கம்பனியில் கடமையாற்றும் எந்த ஊழியரையும் (சட்டத்தின்படி ஊழியராகவுள்ளவர்) முன் உப-விதிகளுக்கமைய நிதியில் அங்கத்தவராக குழு சேர்த்துக் கொள்வது சட்டப்படி செல்லுபடியாகும். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் விதிகளில் குறிப்பிடப்பட்ட கம்பனி எனும் வாசகம் அத்தகைய இதர கம்பனியையும் உள்ளடக்கும். அங்கத்தவராகச் சேர்த்துக் கொள்ளப்

பட்ட ஏனைய கம்பனி ஊழியர் (விதிகளில் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கமைய) அக்கம்பனி சேவையினின்று நீக்கப்பட்டு, உடனடியாக கம்பனியிலோ அல்லது கம்பனியால் நியமிக்கப்பட்ட இதர கம்பனியிலோ சேவைக்கு அமர்த்தப்படின் அப்பேர்ப்பட்டவர் நிதியில் தொடர்ந்து அங்கத்தவராகவே இருப்பார்.

## 9. அங்கத்தவரின் பங்குப் பணம்

(1) ஒவ்வொரு அங்கத்தவரும் பிரதி மாதமும் தனது மாதாந்திர அல்லது தினசரிச் சம்பளத்தில் ஏழரை சத வீதத்திற்குக் குறையாத ஒரு தொகையை தங்களது பங்குப் பணமாக நிதிக்குச் செலுத்த வேண்டும். இப்பேர்ப்பட்ட பங்குப் பண வீதத்தை கம்பனியானது சம்பந்தப்பட்ட மாதாந்தர, தினசரிச் சம்பள ஊழியர்களின் வேதனத்திலிருந்து அறவிட்டு, நிதிக்குச் செலுத்தும். இவ்வாறு அங்கத்தவரால் அவ்வப்போது செலுத்தப்பட்ட பங்குப் பணம் யாவும், நிதிக் கணக்குப் புத்தகங்களில் அங்கத்தவரின் பங்குப் பணமாக வரவு வைக்கப்படும்.

## கம்பனியின் பங்குப் பணம்

(ii) கம்பனி தனது பங்குப் பணமாக, அங்கத்தவர் ஒவ்வொருவரினதும் தினசரி, மாதாந்தர சம்பளத்தில் பத்து சத வீதத்திற்கும், மொத்த வேதனத்தில் ஆறு சத வீதத்திற்கும் குறையாத ஒரு சமமான தொகையை ஒவ்வொரு அங்கத்தவரின் சார்பாகவும் நிதிக்குச் செலுத்தும். இவ்வாறு கம்பனியினால் அவ்வப்போது செலுத்தப்படும் பங்குப் பணம் யாவும், நிதிக் கணக்குப் புத்தகங்களில், கம்பனியின் பங்குப் பணமாக அங்கத்தவரின் பேரில் வரவு வைக்கப்படும்.

(iii) முன் உப-விதிகளின் பிரகாரம் செலுத்தப்படவேண்டிய பங்குப் பணம் யாவும், அம்மாதத்திலேயே நிதிக் கணக்கில் வங்கியில் போடப்படும்.

அவ்வாறு வங்கியில் பணம் போடப்பட்ட வேளையில் ஒரு அங்கத்தவர் நிதியிலிருந்து விலகிக் கொள்ள நேரிடின், அன்னருக்கு நிதி விதிகளின் நியதிகளுக் கமைய சேரவேண்டிய தொகைகள்—உண்மையி லேயே கம்பனியால் இத்தொகைகள் வங்கியில் முடக்கப்பட்டு விட்டுங்கூட — சரிவர செலுத்தப்படும்.

(iv) மேற்படி உப-விதி(ii)ப்படி பங்குப் பணம் வழங்குவதோடு, கம்பனியானது (முற்றிலும் சபை யின் உசிதாசாரப்படி ஊழியர்களுக்கோ அல்லது அவர்களில் எவரேனுக்குமோ) நிர்ணயிக்கும் போனஸில் ஒரு அரைவாசிக்கு சமதையான தொகையை நிதிக்குச் செலுத்தும். அவ்வாறு செலுத்தும் போது அங்கத்தவர் அல்லது அங்கத் தவர்களின் கணக்கில் வரவு வைக்கும்படி கம்பனி ஆணையிடும். அதன்படி செலுத்தப்பட்ட தொகை அங்கத்தவரின் பங்குப் பணமாக கணிக்கப்பட்டு அவரவர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

(v) உப-விதிகள் (i) மற்றும் (ii) ஆகியனவற்றில் குறிப்பிடப்பட்ட நியதிகள், இத்தால் குறிப்பிடப் பட்டவற்ருேடு ஒட்டியே இருக்கும். அவையாவன: (அ) அங்கத்தவரின் பங்குப் பணம், அன்னரின் ஊதியத்தில் நான்கு சத விகிதத்திற்குக் குறையாத தொரு தொகையாக விருக்கும். (ஆ) அங்கத்தவர் சம்பந்தமாக கம்பனியின் பங்குப் பணம், அவ்வூழி யரின் ஊதியத்தில் ஆறு சத விகிதத்திற்குக் குறை யாததொரு தொகையாக விருக்கும்.

(இ) விடுமுறை அல்லது சுகயீன விடுமுறை வாயிலாக கந்தோருக்கு வராதுவிட்ட ஒரு அங்கத் தவருக்கு அந்நாளில் அன்னர் பெறும் சம்பளத்தில் அல்லது ஊதியத்திலேயே பங்குப் பணம் கணக் கிடப்படும்.

(vi) நிதியின் எந்த ஒரு நிதி வருடத்தின்போதும் அங்கத்தவர் கணக்கில் வரவு வைக்கப்பட்ட

கம்பனி பங்குப் பணத்தின் மொத்த தொகை (சட்டத்தின்படியோ அல்லது கம்பனி வெகுமதித் திட்டத்தின்படியோ கோரப்படாத பட்சத்தில் அல்லது) வருமான வரி இலாகா ஆணையாளரால் அங்கிகரிக்கப்படாத பட்சத்தில், அவ்வங்கத்தவர் அவ்வாண்டில் கம்பனி ஊழியராக சேவை செய்து பெற்ற மொத்த ஊதியத்தில் இருபது சத விகிதத்திற்கு மேல் போகக் கூடாது.

(vii) சேமலாப நிதிக்குப் பங்குப் பணம் கொடுபடவேண்டிய சம்பந்தம் ஒரு வெகுமதிக்கிருக்கும் போது, கம்பனியோ அன்றியும் ஊழியரோ இத்தகைய கடமைப்பாட்டிலிருந்து விடுபடுவதற்கான நியதி எதுவும் மேற்படி உப-விதிகளில் கூறப்படவில்லை.

## 10. இதர நிதிகளிலிருந்துபண மாற்றஞ்செய்தல்

கம்பனி சேவையில் அமரும் ஒரு ஊழியர், இச்சேவைக்குமுன் பிறிதொரு சேமலாப நிதியில் அங்கத்தவராக இருந்து, இப்பொழுது 8வது விதியின் பிரகாரம் நிதியில் ஒரு அங்கத்தவராகச் சேருங்கால், முந்திய சேமலாப நிதி மூலம் அப்பேர்ப்பட்ட அங்கத்தவருக்குச் சேர வேண்டிய பணத்தை குழு ஏற்று, அன்னாரின் கணக்கில் அங்கத்தவர் பங்குப் பணமாக வரவு வைக்கும் அல்லது குழு சரியெனத் தீர்மானிக்கும் வேறு முறையில் வரவு வைக்கப்படும். ஆனாலும் இவ்வாறு வரவு வைக்கப்பட்ட தொகை, வருமானவரி காரணங்களுக்காக வருமானவரி இலாகாவினால், முந்திய நிதிக்கு முன்னாள் முதலாளி அளித்த பங்குப் பணமாகவே கருதப்படும்; ஆகவே அத்தகைய தொகை மேற்படி அங்கத்தவரது முதலாளியின் பங்குப் பணமாகவே கணிக்கப்படும்.

## 11. நிதி

9வது விதியின் கீழ் அளிக்கப்பட்ட தொகைகளும், 10வது விதியின்கீழ் ஏற்றுக்கொள்ளப்

பட்ட எந்த தொகைகளும், இத்தகைய தொகைகளை தற்சமயம் பிரதிநிதித்துவம் வகிக்கும் முதலீடுகள், இப்பேர்ப்பட்ட முதலீடுகள் மூலம் அவ்வப்போது கிட்டும் வருமானம், நிதி சார்பாக, நிதிப் பணமாக அமையும்.

## 12. வங்கிக் கணக்கு:

இவ்விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதிக்கப்புறம், நிதியின் வங்கிக் கணக்குகள், "அஸோஸியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் சேமலாப நிதிக் கணக்கு" என்ற பெயரில் இருக்கும், குழுவானது அவ்வப்போது மேற்கொண்டு ஏதேனும் வங்கிக் கணக்குகளை, எந்த வங்கியிலோ அல்லது வங்கிகளிலோ ஆரம்பிக்கும். முறையே அங்கத்தவர்களாலும், கம்பனியினாலும் கொடுக்கப்படும் பங்குப் பணம், முதலீடுகள் மூலம் வரும் வருமானம், நிதியின் பெயரால் பெறும் இதர பணம் யாவும், அவ்வப்போது வங்கியில் நிதிக் கணக்கில் போடப்படும்; பின்னர் நிதிவிதிகளுக்கேற்பக் கையாளப்படும். வங்கி கணக்குகள் யாவும் கம்பனிக் காரியதரிசி, குழுவினால் நியமிக்கப்படும் ஒரு குழு-அங்கத்தவர், நிதிக் காரியதரிசி ஆகிய மூவரின் கைச்சாத்துக்கள் மூலம் பரிபாலிக்கப்படும். இம்மூவரில் எவரேனும் ஒருவர் இல்லாத பட்சத்தில், கம்பனி உதவிக் காரியதரிசியின் கைச்சாத்து போதுமானது. கம்பனி உதவிக் காரியதரிசியின் கைச்சாத்து இருக்கும் பட்சத்தில், கைச்சாத்திட வேண்டியவர்களில் ஒருவர் இல்லாததுபற்றி வங்கி பிரச்சினைப்படுத்தமாட்டாது.

## 13. பொறுப்பாளர்:

(i) தற்சமயம் கீழ்க்காணும் பதவி வகிப்பவர்களே நிதிக் காப்பறவாளர்களாக இருப்பார்கள். அதாவது:

(அ) நியமன குழு-அங்கத்தவராக விருக்கும் கம்பனி நிர்வாக இயக்குநர்,

(ஆ) கம்பனிக் காரியதரிசி, மற்றும்

(இ) நிதிக் காரியதரிசி.

நிதி சரியென நினைக்கும் நிபந்தனைகளுக்கமைய, நிதிக் காப்பறவாணர்களாகக் கடமையாற்றுவதற்கு ஏற்ற காப்பறவாணர்களை அமர்த்துவதற்கு, காப்

பறவாணர்களையல்லாத மூன்று குழு அங்கத்தவர்களை ஒரு தீர்மானத்தின்மூலம் நியமிக்க (இவ்விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கப்புறம் வாய்ப்புகிட்டுங்கால்) தற்சமயத்திற்கு குழுவிற்கு அதிகாரமுண்டு. மேற்படி அமர்த்தப்படும் காப்பறவாணர்களுக்கு அன்னார் ஆற்றும் பணிக்காக வேதனம் எதுவும் வழங்கப்படமாட்டாது. குழுவால் நியமிக்கப்பட்ட குழு அங்கத்தவர்கள் மூவரும், குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய நிதிக் காப்பறவாணர்களாகக் கடமையாற்ற காப்பறவாணர்களை அமர்த்துவார்கள். எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது குழுவானது சபையின் அங்கீகாரத்துடன், தற்சமயம் பணியாற்றும் காற்பறவாணர்களையல்லாத பிறரை நிதியின் காப்பறவாணர்களாக நியமிக்க விரும்பும் பட்சத்தில், புதிய நிதிக்காப்பறவாணர்களை அமர்த்தும் பொருட்டு, ஒரு தீர்மானத்தின்மூலம் குழு அங்கத்தவர்களில் எவரேனும் மூவரை நியமிக்க குழுவுக்கு அதிகாரமுண்டு.

(ii) காப்பறவாணர்கள் 14வது விதியில் குறிக்கப்பட்ட பிரகாரம் அன்னாரின் பெயரில் செய்யப்படும் எல்லா முதலீடுகளுக்கும் தற்சமயம் பொறுப்பாளிகளாக இருப்பர்; குழுவின் ஆணைப்படி நிதியின் சார்பாக வருமானங்களையும், வரவுகளையும் ஏற்பர். அத்துடன் தற்சமயத்திற்கு குழுத் தலைவரின் கையொப்பத்துடனோ அல்லது நியயனக் குழு அங்கத்தவரின் (இவர் சபையால் நியமிக்கப்பட்ட கம்பனியின் ஒரு இயக்குநர் ஆவார்) கையொப்பத்துடனோ எழுத்துமூலம் குழுவினால் விடுக்கப்பட்ட ஆணையின்படி காப்பறவாணர்கள் எல்லா சமயங்களிலும் முதலீடு சம்பந்தப்பட்ட வரவுகளுக்கும் வருமானங்களுக்கும் பொறுப்பாகவிருந்து பணியாற்றுவர்.

(iii) காப்பறவாணர்கள் ஒவ்வொருவரும் (அப்பேர்ப்பட்டவர்கள்) தாம் உண்மையிலேயே ஏற்றுக்

கொண்ட பணத்திற்கல்லாது, குழு அல்லது ஏதேனும் வங்கி தரகர் ஏஜண்ட் முதலியவர்களின் நடவடிக்கைகள், முடிவுகள், தவறுகள் அல்லது புறக்கணிப்புகளுக்கோ அல்லது நிதியின் பணம் அல்லது பிணை ஒப்படைக்கப்பட்ட காரணங்களுக்கோ, அல்லது ஏதேனும் முதலீடுகள் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அல்லது நஷ்டங்களுக்கோ, குழு ஆணையின்படி செயலாற்றியமைக்கோ அல்லது பொதுவாக ஏற்படும் எத்தகைய நஷ்டங்களுக்கோ பொறுப்பாளியாகவும் மாட்டார்கள்-குற்றஞ் சுமத்துவதற்கு இலக்காகவும் மாட்டார்கள். ஆனாலும் மேற்கண்டவை அன்னாரின் சுய நடவடிக்கையினால், விடுபடுதலினால் அல்லது தவறுதலினால் ஏற்படின் கேள்விக்குரியவராவர்.

(iv) காப்பறவாணர்கள் (அப்பேர்ப்பட்டவர்கள்) நிதிப் பணம் சம்பந்தப்பட்ட விண்ணப்பம் பற்றியோ அல்லது முதலீடுகளிலிருந்து பெறப்படும் வருமானம் பற்றியோ அல்லது தாக்கல் செய்யப்படும் விண்ணப்பம், விதிகளை அனுஷ்டித்துள்ளதா வென்பது பற்றியோ அல்லது விதிகள் அவ்வப்போது பின்பற்றப்படுகிறதா வென்பது பற்றியோ கவலை கொள்ளத் தேவையில்லை.

உத்தரவாதம்: (V) குழுவும், காப்பறவாணர்களும், நிதி சம்பந்தமாக அவர்களால் ஏற்பட்ட சகல கடன் பொறுப்புகளுக்கும், நிதி நிர்வாகத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும், விதிகளை அமுலாக்குவதற்கும், அவரவர் கடமைகளைச் செய்வதற்கும், அல்லது அவர்களுக் கெதிராக வழக்குகள், நடவடிக்கைகள் தொடரப்படுவதற்கும் உத்தரவாளிகளாவர்.

14. முதலீடு:

(i) நிதிக் காரணங்களுக்காக உடனடியாக தேவைப்படாத பணம் அனைத்தும், அவ்வப்போது, குழு உசிதாசாரத்தின்படி முதலீடு செய்யப்படும், அல்லது

(அ) நம்பிக்கைப் பணத்தை முதலீடு செய்வதற்கு சட்டம் அங்கீகரிக்கும் ஏதேனும் ஒரு முதலீட்டில் முடக்கப்படும், அல்லது

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட குழு அங்கத்தவர்களில் ஆறு பேர்களுக்குக் குறையாதவர்களைக் கொண்ட குழுவின் பெரும்பான்மையாளோரின் அங்கீகாரம் அளிக்கப்பட்டதன் பேரில் பொறுப்பாணர்-அற்ற அமைப்பியல் முதலீட்டில் முடக்கப்படும், அல்லது

(இ) இலங்கையில் அலுவல் நடாத்தும் எந்த வங்கியின் தற்காலிக அல்லது நிர்ணய வைப்புப் பணம் அல்லது சேமிப்பு வைப்புப் பணத்தில் அல்லது இலங்கை சேமிப்புப் பத்திரங்களில் முடக்கப்படும், அல்லது

(ஈ) 15வது விதி நியதிகளின் கீழ் அங்கத்தவர்களுக்குக் கடன் வழங்கப்படும்.

இவ்விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதிக்கப்புறம், எந்தப் பணமாவது மேற்படி (அ) அல்லது (ஆ)வில் குறிப்பிடப்பட்ட எந்த முறையான முதலீட்டிலாவது முடக்கப்பட்டிருப்பின் அல்லது 16வது விதியின் பிரகாரம் பொறுப்பாணர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டிய இன்சூரன்ஸ் பொலிஸி எதுவும் எடுக்கப்பட்டிருப்பின், முதலீடுகள், "அஸோஷியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் சேமலாப நிதி பொறுப்பாணர்கள்" பெயரில் செய்யப்பட வேண்டும் அல்லது பொலிஸி இப்பெயருக்கு உரிமை மாற்றஞ் செய்யப்பட வேண்டும்; மேற்படி (இ)யில் குறிப்பிடப்பட்ட எந்த வகையான முதலீட்டிலாவது எந்தப் பணமாவது முடக்கப்பட்டிருப்பின், நிதிப் பெயரிலேயே முதலீடு செய்து பயன் பெறலாம். அன்றியும் நிதி வங்கிக் கணக்கெனில் 12வது விதியின் பிரகாரம் மூன்று பேர்களின் கைச்சாத்துக்களின் பேரில்

பணமெடுக்கலாம். இவ்விதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதிக்கு முன் நிதிப் பண மெதுவும் ஒரு பெயரிலோ அல்லது பெயர்களிலோ முதலீடு செய்யப்பட்டிருந்தால், அத்தகைய முதலீடுகளைக் கூடியவரை இதற்கு முந்திய நியதிகளுக்கேற்ப அப்பேர்ப்பட்ட பெயரில் உரிமையாக்கஞ் செய்யப்படும்.

(ii) தொழில் ஆணையாளரால் கோரப்படுங்கால், குழுவானது நிதியின் எல்லா முதலீடுகளையும் (இன்சூரன்ஸ்களைத் தவிர்த்து) மதிப்பீடு செய்து, மதிப்பீட்டின் பிரதி ஒன்றை மேற்படி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கும். அத்துடன் குழுவும் தனக்குச் சரியெனப்படும் சந்தர்ப்பத்தில் முதலீடுகளை மதிப்பிடும். அவ்வாறு மதிப்பிடும்போது, எந்த முதலீடுகளையும் பெற்றதினுலோ, விற்றதினுலோ இலாபம் அல்லது நஷ்டம் ஏற்பட்டால், அத்தகைய மதிப்பீட்டில் உண்டாகும் குறைவு, நிறைவுகளையும், பெறப்பட்ட இலாப, நஷ்டங்களையும் நிதிக் கணக்கில் எவ்வாறு எழுதப்படவேண்டுமென்பதுபற்றி குழு தனது உசிதாசாரப்படி ஆணையிடும்; அவசியப்படுங்கால் அங்கத்தவர்களின் கணக்கில் விசிதாசாரப்படி பதிய உத்தரவிடும்.

(iii) பங்குகள் குறிப்பிட்டுக் கோரப்பட்ட ஒரு பொதுக் கம்பனியில் ஒரு பங்குதாரராகவன்றி, கம்பனிக்கு அல்லது கம்பனிக்கு உரித்தான இன்னெரு கம்பனிக்கு அல்லது துணை நிறுவனத்துக்கு அல்லது ' கம்பனி பாத்தியதை கொண்டாடும் ஏதேனும் பிறிதொரு வியாபாரத்துக்கு கடன் கொடுக்கவோ, வியாபாரத்தில் அல்லது பிணையில் முடக்கவோ நிதியின் எந்த ஒரு பகுதிப் பணமும் பாவிக்கப்படலாகாது.

## 15. கடன்கள்:

இந்த விதி, இவ்விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் தொடக்கம் அமுலாகும். அங்கத்தவர் ஒரு

வர் எழுத்து மூலம் விண்ணப்பம் செய்து கொள்வதை யொட்டி, இத்தால் குறிப்பிட்ட எந்த ஒரு காரணத்திற்கும் சரியெனப்படும் அத்தகைய ஒரு கடன் தொகையை எல்லையைத் தாண்டாமல், நிதிப் பணத்திலிருந்து வழங்குவதற்கு குழு அங்கீகாரமளிக்கும். கடன் வழங்குவதானது கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கமையவே இருக்கும்:-

(i) **காரணங்கள்:** (அ) அங்கத்தவரின் சுகயீனம் அல்லது அவரின் குடும்பத்திலுள்ள ஒருவரின் சுகயீனம் அல்லது அங்கத்தவரின் பிள்ளைப் பிறப்பு சம்பந்தப்பட்ட செலவினங்களுக்குச் செலுத்துதல்.

(ஆ) அங்கத்தவரின் கல்யாணம் அல்லது அவரது குடும்பத்திலுள்ள ஒருவரின் கல்யாணம் அல்லது இறப்பு அல்லது அங்கத்தவரின் சமயாசாரப்படி செலவு செய்ய வேண்டிய நிலையிலுள்ள ஒரு சடங்கு சம்பந்தப்பட்ட செலவினங்களுக்குச் செலுத்துதல்;

(இ) சட்டரீதியான பிள்ளைகள் அல்லது வளர்ப்புப் பிள்ளைகள் அல்லது சட்டரீதியான சுவீகாரக் குழந்தைகள் ஆகியோருக்குத் தேவைப்படும் பாடப் புத்தகங்களுக்குரிய செலவினங்கள்:

(ஈ) அங்கத்தவர் தான் வசிக்க ஒரு வீடு பெறுவதற்கு முன்கூட்டி வாடகைப் பணம் செலுத்துதல்:

(உ) அங்கத்தவருக்கு அல்லது அவரின் மனைவிக்கு உரித்தானதும், அங்கத்தவர் வசிக்கக் கூடியதுமான வீட்டுக்கு பழுதுபார்ப்பு அல்லது விஸ்தரிப்பு வேலைகளுக்கான செலவினங்களுக்குத் தேவைப்படும் பணம்;

(ஊ) அங்கத்தவருக்கு அல்லது அவரின் மனைவிக்குச் சொந்தமான காணியில் ஒரு வீடு கட்ட அல்லது அங்கத்தவர் வசிப்பதற்கு ஒரு வீட்டையோ அல்லது வீட்டிற்கான ஒரு இடத்தையோ வாங்க ஏற்படும் செலவினத்திற்குத் தேவைப்படும் பணம்;

(எ) எதிர்பாரா இழப்பு அல்லது பெரும் கஷ்டம் நேரிட்ட வேளை ஏற்படும் செலவினங்களைச் சமாளிப்பதற்கு அங்கத்தவருக்குத் தேவைப்படும் பணம்.

(ii) **வரையறைகள்:** (அ) **"காரணங்கள்"** என்ற தலைப்பின் கீழ் உள்ள (அ) மற்றும் (ஆ) உப-பந்திகளில் குறிப்பிட்ட காரணங்களுக்குக் கோரப்படும் கடன்கள், அங்கத்தவர் கடன் மனு தாக்கல் செய்த நாளில் பெறும் சம்பளத்தில் மும்மடங்குக்குச் சமதையான தொகைக்கு மேலோ அல்லது அந்த சந்தர்ப்பத்தில் அன்னாரின் கணக்கில் வரவிருக்கும் தொகையில் நாற்பது சத விகிதத்திற்கு மேலோ, எது குறைவாயிருப்பினும், அதற்கு மேல் போகக் கூடாது;

(ஆ) **"காரணங்கள்"** என்ற தலைப்பின் கீழ் உள்ள (இ) உப-பந்தியில் குறிப்பிட்ட காரணங்களுக்குக் கோரப்படும் கடன்கள், அங்கத்தவர் கடன் மனு தாக்கல் செய்த நாளில் பெறும் ஒரு மாத வேதனத்திற்குச் சமதையான தொகைக்கு மேலோ அல்லது அந்த சந்தர்ப்பத்தில் அன்னாரின் கணக்கில் வரவிருக்கும் தொகையில் பதினைந்து சத விகிதத்திற்கு மேலோ, எது குறைவாயிருப்பினும், அதற்கு மேல் போகக் கூடாது;

(இ) மேற்படி (ஈ) உப-பந்தியில் குறிப்பிட்ட காரணங்களுக்குக் கோரப்படும் கடன்கள், அங்கத்தவர் கடன் மனு தாக்கல் செய்த நாளில் பெறும் சம்பளத்தில் மும்மடங்குக்குச் சமதையான தொகைக்கு மேலோ அல்லது அந்த சந்தர்ப்பத்தில் அன்னாரின் கணக்கில் வரவிருக்கும் தொகையில் நாற்பது சத விகிதத்திற்கு மேலோ, எது குறைவாயிருப்பினும், அதற்கு மேல் போகக் கூடாது;

(ஈ) "காரணங்கள்" என்ற தலைப்பின் கீழ் உள்ள (உ) உப-பந்தியில் குறிப்பிட்ட காரணங்களுக்குக் கோரப்படும் கடன்கள், அங்கத்தவர் கடன் மனு தாக்கல் செய்த நாளில் பெறும் சம்பளத்தில் ஒன்பது மடங்குக்குச் சமதையான தொகைக்கு மேலோ அல்லது அந்த சந்தர்ப்பத்தில் அன்னாரின் கணக்கில் வரவிருக்கும் தொகையில் நாற்பது சத விகிதத்திற்கு மேலோ, எது குறைவாயிருப்பினும், அதற்குமேல் போகக் கூடாது;

(உ) "காரணங்கள்" என்ற தலைப்பின் கீழ் உள்ள (ஊ) உப-பந்தியில் குறிப்பிட்ட காரணங்களுக்குக் கோரப்படும் கடன்கள், (i) அங்கத்தவர் கடன் மனு தாக்கல் செய்த நாளில் அன்னாரின் வரவிலிருக்கும் பாக்கித் தொகைக்கும் (ii) அங்கத்தவருக்கு நிதியின் சார்பாக முன்பு கொடுக்கப்பட்ட கடன்கள் அல்லது கம்பனியினால் கொடுக்கப்பட்ட அட்வான்ஸ்கள் சம்பந்தமாக இன்னும் செலுத்தப்படாமல் இருக்கும் பாக்கித் தொகைக்குமிடையிலுள்ள வித்தியாசத்தில் எழுபத்தைந்து சத விகிதத்திற்கு மேல் போகக் கூடாது;

(ஊ) "காரணங்கள்" என்ற தலைப்பின் கீழ் உள்ள (எ) உப-பந்தியில் குறிப்பிட்ட காரணங்களுக்குக் கோரப்படும் கடன்கள், அங்கத்தவர் கடன் மனு தாக்கல் செய்த நாளில் அன்னாரின் பெயரில் வரவிருக்கும்-அதாவது அங்கத்தவர் பங்குப் பணத்தில் வரவிருக்கும்-தொகையில் ஐம்பது சத விகிதத்திற்கு மேல் போகக் கூடாது; தவிரவும் அங்கத்தவர் கோரிய கடன், விதியின்கீழ் உள்ள ஏனைய நியதிகளுக்கமைய கொடுக்கப்பட்ட கடன் போதவில்லை என்றறிந்தமட்டில், கடைசி நிவாரணமாக குழு அங்கத்தவர்களில் முக்கால்வாசி பேர்களுக்குக் குறையாதவர்களைக் கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றினாலன்றி கொடுபடக் கூடாது.

(iii) நிபந்தனைகள்: (அ) எந்தக் கடனும் வழங்கப்படு முன், கோரப்பட்ட கடன் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ வழங்குவது சம்பந்தமாக குழு திருப்திபடும் பொருட்டு, அங்கத்தவரானவர் குழுவுக்குத் தேவையான சகல தஸ்தாவேஜுகளையும் தகவல்களையும் எழுத்து மூலம் கொடுக்க வேண்டும். மேலும் ஒரு கடன் வழங்கப்படும்போது, அங்கத்தவரின் பற்றுச்சீட்டு, அவர் கடன் பெற்றுக் கொண்டார் என்பதற்குப் போதுமான அத்தாட்சியாகும்;

(ஆ) கடன் வழங்குதல், கடன் தொகை, கடன் அடைப்பு தவணை முறைகள் ஆதியன முற்றிலும் குழுவின் உசிதாசாரத்தைப் பொறுத்தது. தவிரவும் அன்னூர் வருமான வரி இலாகாவுடன் சம்பந்தப்பட்ட பொறுப்பையும் தீர்க்கமாக ஆவன செய்வர். அத்துடன் குழு தான் செய்யும் முடிவுக்கான காரணங்களை வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை; மேலும் கடன் மனுவை ஏற்றுக் கொண்டுவிட்டால், கோரப்பட்ட முழுக் கடனையோ அல்லது பகுதியையோ கொடுக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை;

(இ) இவ்விதியின் முந்திய அதிகாரங்களில் குறிப்பிட்ட "அவரின் குடும்ப அங்கத்தவர்" எனும் வாசகம் அங்கத்தவருடன் வசிக்கும் மற்றும் அங்கத்தவரின் பராமரிப்பில் (அல்லது வாழ்நாளில் வசித்து முற்றிலும் உதவியை எதிர்பார்ப்பவர்) இருக்கும் கீழ்க்காண்பவர்களைக் குறிக்கும். உதாரணமாக மனைவி (அல்லது சமயங்களில் கணவன்) சட்டரீதியான பிள்ளை, உண்மையான சுவீகாரக் குழந்தை, வளர்ப்புப் பிள்ளை, பெற்றோர். சகோதரி அல்லது பிராயமாகாத சகோதரர்.

(ஈ) நிதி வழங்கும் ஒவ்வொரு கடனும், 25வது விதியின் கீழ் கம்பனியின் உறவுக்குப் பங்கம் உண்டு பண்ணுமல் இருக்க வேண்டும்.

(உ) வழங்கப்படும் ஒவ்வொரு கடனும் நிதியின் ஒரு முதலீடாகக் கருதப்பட்டு, தொகையின் பேரில் வட்டி விகிதங்கள் முறைப்படி அமுல் செய்யப்படும். குழு தீர்மானிக்கும் திகதி அல்லது திகதிகளில் அப்பேர்ப்பட்ட தொகை அறவிடப் படும். தற்சமயம் செலுத்தப்படா திருக்கும் தொகைக்கு ஆறு சத விகித வருடாந்தர வட்டி கணக்கிட்டிருக்கும்போது, அதைவிட மேலதிகமாக வட்டி வகையில் அறவிடாதிருக்கும் வண்ணமே பிரஸ்தாப கடன், வட்டி விகிதங்கள், செலுத்தப் படும் திகதிகள் தீர்மானிக்கப்படும்.

(ஊ) வழங்கப்படும் ஒவ்வொரு கடனும் வட்டி யுடன், குழு உசிதாசாரத்தின்படி தீர்மானிக்கும் திகதியிலிருந்து தவணை முறைகளில் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும். திருப்பிச் செலுத் தப்படும் தொகை விகிதங்களையும், தவணை முறை களையும் தீர்மானிக்கும்போது, குழுவானது 1954ம் வருட 19ம் இலக்க ஷாப்புக் காரியாலயச் சட்ட (தொழில் சம்பளச் சட்டம்) நியதிகள், திருத்தங் கள் மற்றும் உருவாக்கப்பட்ட சட்டங்கள் உட்பட தான் சரியென நினைக்கும் சகல விஷயங்களையும் கருத்தில் கொள்ள கடமைப்பட்டுள்ளது.

(எ) "காரணங்கள்" என்ற தலைப்பின் கீழ் உள்ள (ஊ) உப-பந்தியில் குறிப்பிட்ட ஏதாவ தொரு காரணத்திற்கு வழங்கப்படும் கடனை, சம் பந்தப்பட்ட அங்கத்தவரின் வயது காரணமாக உத்தியோகத்தினின்று ஓய்வு பெறும் காலத்திற்குள் முழுக் கடனையும் தவணை முறைகளில் அறவிட முடியாதென குழு நினைக்கும் பட்சத்தில், அவ ரிடத்திலிருந்து, நிதி அங்கத்தவராக இருக்கும் காலத்திலேயே பகுதிவாரியாக திருப்பிக் கடனைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் (நிதி அங்கத்துவத்தி லிருந்து விடுபட்டுக் கொள்ளும் காலத்தைக் கணக்

கிட்டு, அதற்கேற்ப தவணைமுறைத் தொகையை நிர்ணயிக்கலாம்) ஏற்ற ஒழுங்குகள் செய்யலாம்;

(ஏ) **"காரணங்கள்"** என்ற தலைப்பின் கீழ் உள்ள (ஊ) உப-பந்தியில் குறிப்பிட்ட ஏதாவதொரு காரணத்திற்கு கடன் வழங்கப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட காணி அல்லது வீட்டின் ஒப்பினை, குழு ஆணைப்படி, கடன் திருப்பி அடைபடும் வரை, பாதுகாவலாக, நிதிக் காரியதரிசியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்; பிரஸ்தாப கடன் திருப்பிக் கொடுக்கப்படும் வரை, காணியை அல்லது வீட்டை விற்கவோ, அடமானம் வைக்கவோ அல்லது வேறு வழிகளில் பயன்படுத்துவதோ இல்லையென அங்கத்தவர் அல்லது அவரின் மனைவி குழுவிற்கு எழுத்து மூலம் ஒரு உறுதிமொழி வழங்கவேண்டும். குழுவானது (நிதியின் பெயரில், நிதியின் சார்பாக) காணி அல்லது வீடு சம்பந்தமாக காணிப் பதிவகத்தில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சட்ட நடவடிக்கையை நிறுத்தி வைக்கும் உரித்தை பதிவாக்கி வைக்க அதிகாரமுடையது.

(ஐ) அங்கத்தவர் ஒருவர் பிழையான அல்லது பொய்யான தகவலின் பேரில் அல்லது கோரிய காரணத்திற்காக கடன் பெறவில்லை என்று குழுவுக்குத் தெரிய வந்தால், அப்பேர்ப்பட்டவரை (எழுத்து மூலம் விளக்கம் தருவதற்குப் போதிய சந்தர்ப்பமளித்து விசாரணைக்குப் பின்) ஒரு குறிப்பிட்ட திகதியிலிருந்து அங்கத்துவப் பதவியிலிருந்து விலக்கிவைக்க குழுவுக்கு அதிகாரமுண்டு. பிரஸ்தாப விலக்கப்பட்ட திகதியிலிருந்து அங்கத்தவர் ஊழியர் சேமலாப நிதியில் அங்கத்தவர் ஆவார். ஆகவே விலகிய திகதிவரை அவரின் பெயரிலிருந்த பணம் அனைத்தும் (வழங்கப்பட்ட கடனில் செலுத்தப்படாத தொகை எதுவுமிருப்பின் அதனையும், உரிய வட்டியையும், 25வது விதியின் கீழ்

கம்பனிக்கு பங்கம் உண்டுபண்ணுவண்ணம் சேர வேண்டிய வருமதிகளையும் கழித்துக்கொண்டு) ஊழியர் சேமலாப நிதிக்கு மாற்றப்படும்; மேற்படி அங்கத்தவர், ஊழியர் சேமலாப நிதியில் அங்கத்தவராக தகுதியுடையவராக இல்லாத பட்சத்தில், நிதியில் தொடர்ந்து ஒரு அங்கத்தவராக இருக்க குழு அனுமதிக்கும். ஆனால் அன்னருக்கு அதற்கப்புறம் எக்காரணம் கொண்டும் கடன் எதுவும் வழங்கப்படமாட்டாது;

(ஒ) உப-பந்தி (ஐ)ல் குறிக்கப்பட்ட விதி முறைகள், மேற்படி (ஏ) உப-பந்தியில் கூறப்பட்ட உறுதி மொழியை அங்கத்தவர் அல்லது அவரின் மனைவி மீறும் பட்சத்தில் அமுலாகும்; ஆனால் கடன் பாக்கித் தொகையையும், உரிய வட்டியையும் உடனடியாக நிதிக்குச் செலுத்தும்படி பணிக்கப்பட்டு, அதன்படி ஆவன செய்யின் பாதகம் எதுவும் விளையாது;

(ஓ) கடன் திருப்பிக் கொடுக்கும் தவணை முறைகள் சரிசமதையாகவோ அல்லது அநேகமாக சரிசமதையாகவோ குழு வசதியென நினைக்கும் பிரகாரம் இருக்கும்;

(ஔ) கம்பனி, கடன் பணத்தை அங்கத்தவரின் சம்பளத்திலிருந்து தவணை முறைகளில் அறவிட்டு நிதிக்குச் செலுத்தும்;

(க) நிதியிலிருந்து கடனாக வழங்கப்பட்ட முழுத் தொகையையும் அங்கத்தவர் ஒருவர் வட்டி சகிதம் முற்றாகச் செலுத்துவதற்கு முன் மீண்டும் கடன் கோரி விண்ணப்பித்தால், குழுவானது தனது உசிதாசாரத்திற்கேற்ப அவ்வங்கத்தவருக்கு கடன் வழங்கலாம்; இரு கடன்களையும் தவணை முறைகளில் அறவிடுவது சம்பந்தமாக குழுவே தீர்மானிக்கும்; ஆனால் முதல் கடன் எடுத்த ஆறு மாதங்களுள் மறு கடன் கோரப்படின் அது

வழங்கப்படமாட்டாது. மேலும் ஒரு கடனுக்கு மேலதிகமாக கடன் வழங்குவதானதும் இவ்விதியின் உப-விதிகள் அனைத்தையும் அநுசரித்தே இருக்கும்.

(கா) அங்கத்தவர் ஒருவர் நிதியின் அங்கத்துவப் பதவியிலிருந்து விடுபடுங்கால், நிதிக்கு அவர் செலுத்த வேண்டிய பாக்கிக் கடன் அல்லது கடன்கள் (25வது விதியின் கீழ் கம்பனிக்குப் பங்கமோ பாரபட்சமோ இல்லாமல்) அச்சந்தர்ப்பத்தில் விதியின்கீழ் அங்கத்தவருக்கோ அன்றியும் கொடுபட வேண்டியவருக்கோ நிர்ணயிக்கப்பட்ட தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்படும். அத்துடன் அங்கத்துவப் பதவியிலிருந்து விடுபடும் வேளை விதிகளின்கீழ் செலுத்தப்பட வேண்டிய சகல தொகைகளும் எல்லா சந்தர்ப்பங்களிலும் இந்த உப-விதியின் நியதிகளை அநுசரித்தேஇருக்கும்.

## 16. இன்சூரன்ஸ்

இந்த விதி, இவ்விதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து அமுலிலிருக்கும்.

குழுவானது எழுத்துமூலம் விடுக்கப்படும் அங்கத்தவர் ஒருவரின் வேண்டுகோளை (அங்கத்தவரானவர் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பெயரையும் இன்சூரன்ஸ் தொகையினையும், முறைகளையும் மற்றும் குழு கோரும் இதர விபரங்களையும் சமர்ப்பிக்கவேண்டும்) பரிசீலித்து அவ்வப்போது அங்கத்தவர் பங்குப் பணத்தின் பேரிலும் வரவிருக்கும் தொகையிலிருந்து கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கமைய இன்சூரன்சுக்கு பணம் வழங்க ஏற்ற ஒழுங்குகள் செய்யும்.

### பொது:

(i) அங்கத்தவர் ஒருவர் எடுக்க உத்தேசித்திருக்கும் இன்சூரன்ஸை அங்கீகரிக்குமுன் குழுவா

னது கம்பனிக்கு அல்லது நிதிக்கு கடன் எடுத்த வகையில் அங்கத்தவரிடமிருந்து பாக்கியாக வீர விருக்கும் தொகையை நிர்ணயித்துக் கொண்டு, இன்சூரன்ஸ் தொகையை உசிதாசாரத்திற்கேற்ப சூழ்நிலையை அநுசரித்து குறைத்து விடலாம்;

(ii) அப்பேர்ப்பட்ட இன்சூரன்ஸ் அங்கத்தவ ரின் ஆயுளின் பேரில் ஒரு பொறுப்புரிமை இன்சூ ரன்ஸாகக் கணிக்கப்பட்டு அவர் வயதெல்லையை அடையும் போதோ அல்லது முன்கூட்டி இறக்க நேரிட்டாலோ அவரின் பரிபாலகர்களுக்கு, நிர்வாகி களுக்கு அல்லது நியமனதாரர்களுக்கு பணம் வழங்கப்படும்.

(iii) இன்சூரன்ஸ் நிறுவனம் மேற்படி பொலிஸி யை குழுவுக்கு அனுப்பி வைக்கும்; இது அங்கத் தவரின் செலவில் (நிதிப் பணத்திலிருந்து கட்டப் படும்) காப்பறவாணர்கள் வசம் விதிகளுக்கமைய வும், குழு ஆணைக்கமையவும் பாதுகாப்பாக விருக்கும்.

(iv) பொலிஸியின் பேரில் சுமரும் போனஸ்கள், கழிவுப் பணங்கள் இதர அநுகூலங்கள் அனைத்தும் இன்சூர் செய்த தொகை கொடுபட வேண்டிய காலம் வரை இன்சூரன்ஸ் நிறுவனத்தோடேயே இருக்கும்; ஈற்றில் விதிகளுக்கமைய பிரிபடும்.

(v) விதிகளின் பிரகாரம் காப்பறவாணர்களுக்கு உரிமை மாற்றம் செய்வதைத் தவிர்த்து வேறு எக்காரணங் கொண்டும் பொலிஸியை உரிமை மாற்றஞ் செய்யவோ, அடமானம் வைக்கவோ, ஒப்படைக்கவோ, அயலார்க்கு உடைமையாக்கவோ அல்லது பொலிஸி பிணையின் பேரில் கொடுக்கல் வாங்கல் செய்யவோ அல்லது பணம் பெறவோ அல்லது இவ்வாறு செய்யவோ அன்றியும் பொலிஸி பறிமுதலாக்கப்படுவதற்கு வழிவகை செய்யவோ அங்கத்தவரானவர் முற்படக் கூடாது.

(vi) பொலிஸி சம்பந்தமாக கட்டப்படும் வருடாந்த பிரிமியத் தொகை, குழு அங்கீகாரத்திற்கமையவே இருக்கும்; ஆனாலும் எக்காரணங்கொண்டும் இத்தொகை அங்கத்தவர் மனு செய்து கொண்ட திகதிக்கு முந்திய நிதி வருடத்தின்போது 9 (i) மற்றும் 9 (ii) (v) விதிகளின் கீழ் மற்றும் அங்கத்தவரின் மொத்த பங்குப் பணத்தில் எழுபத்தைந்து சத விகிதத்திற்கு மேல் போகாது;

(vii) அங்கத்தவரானவர் நிதியில் ஒரு அங்கத்தவராக இருக்கும் வரை, இன்சூரன்ஸுக்குப் பணம் செலுத்த அவரது கணக்கில் போதுமான தொகை இருக்கும் வரை, விதிகளுக்கமைய வருடாந்தப் பிரிமியம் நிதியினால் இன்சூரன்ஸ் நிறுவனத்துக்குச் செலுத்தப்பட்டு, அத்தகைய தொகை அங்கத்தவரது கணக்கில் குழு நினைக்கும் விகிதாசாரத்தில் அங்கத்தவர், கம்பனி பங்குப் பணங்களுக்கு மத்தியில் பற்றெழுதி வைக்கப்படும். இன்சூரன்ஸ் நிறுவனத்துக்கு செலுத்தப்பட்ட தொகைக்குக் கிடைக்கும் ரசீது நிதியிடமே இருக்கும்;

விசேஷம்

(viii) அங்கத்தவரால் எழுத்து மூலம் விடுக்கப்படும் வேண்டுகோளையொட்டி பொலிஸியை ஒரு செலுத்தப்பட்ட-பொலிஸியாக மாற்றலாம். இதற்கு மேற்கொண்டு ஏதேனும் பிரிமியம் செலுத்த வேண்டியேற்படின், அத்தகைய தொகை அங்கத்தவரால் ஒரு மேலதிகப் பங்குப் பணமாக நிதிக்குச் செலுத்தப்படும். மேற்படி மாற்றப்பட்ட பொலிஸி காப்பறவாணர்களின் பெயரில் பூர்வாங்க பொலிஸியின் அதே நிபந்தனைகளுக்கமைய காப்பறவாணர்களின் பாதுகாப்பிலேயே இருக்கும்;

(ix) அங்கத்தவர் எழுத்து மூலம் விடுக்கும் வேண்டுகோளின் பேரில் பொலிஸி சரண் செய்யப்

படும். சரண் பெறுமதி, நிதியினுல் முன் செலுத்தப்பட்ட எல்லாப் பிரிமியங்களினதும் மொத்தத் தொகையைவிட மேலோங்கி இருக்கும் பட்சத்தில், காப்பறவாணர்கள் சரண் பெறுமதியைக் கீழ்க் கண்டவாறு நிர்ணயிப்பர்—(அ) மொத்தத் தொகை, முன்பு பிரிமியம் கட்டி பற்றெழுதப் பட்ட விகிதாசாரத்திலேயே அங்கத்தவர் கணக்கில் வரவு வைக்கப்படும். (ஆ) சரண் பெறுமதியில் ஏதேனும் மிகுதி இருப்பின் அதனை அங்கத்தவருக்குச் செலுத்துதல். சரண் பெறுமதி, நிதியினுல் முன் செலுத்தப்பட்டு, கம்பனி பங்குக் கணக்கில் அங்கத்தவரின் பெயரில் பற்றெழுதி வைக்கப்பட்ட பிரிமியங்களின் மொத்தத் தொகையிலும் பார்க்க குறைவாக விருப்பின், அக்குறைவான தொகையை கம்பனி பங்குக் கணக்கில் வரவு வைப்பதற்கு ஏற்றாற்போல் அங்கத்தவர் பணம் செலுத்தும் வரை, பிரஸ்தாப பொலிஸி சரண் செய்யப்படமாட்டாது. சரண் பெறுமதி, நிதியினுல் முன் செலுத்தப்பட்ட எல்லா பிரிமியங்களினதும் மொத்தத் தொகையிலும் பார்க்கக் குறைவாகவும், கம்பனி பங்குக் கணக்கில் அங்கத்தவரின் பெயரில் பற்றெழுதப்பட்ட பிரிமியங்களின் மொத்த தொகையிலும் பார்க்க கூடியும் இருப்பின், பொலிஸி சரண் செய்யப்படும்; ஆனுல் சரண் பெறுமதி கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப் படும். (அ) பற்றெழுதி வைக்கப்பட்ட பிரிமியங்களின் மொத்தத் தொகை யாவும் கம்பனி பங்குக் கணக்கில் வரவு வைக்கப்படும் (ஆ) ஏதேனும் மிகுதியிருப்பின் அங்கத்தவர் கணக்கில் வரவு வைக்கப்படும்;

(X) நிதியினுல் பராமரிக்கப்படும் இன்சூரன்ஸ் பொலிஸிக்கு உரித்தான அங்கத்தவர் ஒருவர் எந்த சந்தர்ப்பத்திலாவது (மரணம் ஏற்பட்டாலன்றி) பொலிஸி பூர்த்தியாகு முன்னமே நிதி அங்கத்துவப்

பதவியினின்று விடுபட்டுக் கொண்டால், குழுவானது (அ) சம்பந்தப்பட்ட பொலிஸியை, குறைந்த பட்ச மேலதிக பிரிமியத்தின் பேரில் முழுதும் செலுத்தப்பட்டதொரு பொலிஸியாக மாற்றவும், இன்சூரன்ஸ் நிறுவனத்தின் கோரிக்கையின் பேரில், பூர்வாங்கப் பொலிஸியைப் போலவே அதே திகதியில் பூர்த்தியாகவும் செய்யும். **அல்லது** (ஆ) பொலிஸியை சரண் செய்யச் செய்யும், அல்லது (இ) அங்கத்தவர் வேண்டுகோளின் பேரில், குழு உசிதாசாரத்தின்படி சரியெனப்படின், பொலிஸியை திரும்பவும் அங்கத்தவருக்கே உரித்தாக்கச் செய்யும்: **ஆனல்** இதற்கு அங்கத்தவர் 15வது விதி......அல்லது 26வது விதியின் கீழ் அங்கத்துவப் பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும், பொலிஸியும் சரண் செய்யப்படும்;

(xi) மேற்படி (x) உப-விதியின் கீழ் பொலிஸி ஒரு செலுத்தப்பட்ட பொலிஸியாக மாற்றப்பட்டிருப்பின், அவ்வாறு மாற்றப்பட்ட பொலிஸி அங்கத்தவர் செலவில் (அல்லாவிட்டால் நிதியின் மூலமாக) அவருக்கே உரிமையாக்கப்பட்டு ஒப்படைக்கப்படும். பொலிஸி சரண் செய்யப்பட்டிருந்தால், இன்சூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பட்ட பணமனைத்தும் காப்பறவாணர்களால் நிதிக்குச் செலுத்தப்பட்டு, (xii) உப-விதியின்படி பரிபாலிக்கப்படும். அங்கத்தவரின் வேண்டுகோளுக்கிணங்க, பொலிஸியை மீண்டும் அவருக்கே உரிமையாக்குவதற்குக் குழு அங்கீகாரமளிக்கும் பட்சத்தில், பிரஸ்தாப பொலிஸி அங்கத்தவர் செலவிலேயே (அல்லாவிட்டால் நிதியின் மூலமாக) அவருக்குப் புனர்-உரிமையாக்கப்பட்டு, ஒப்படைக்கப்படும்;

(iii) உப-விதி (x) நியதிகளைத் தொடர்ந்து பொலிஸி சரண் செய்யப்பட்டால் அல்லது (அங்கத்தவர், நிதி அங்கத்தவராக இருக்கும் போதே)

பொலிஸி பூர்த்தியானல் அல்லது அங்கத்தவர் இறந்து போனல், பொலிஸியின் பேரில் கிடைத்த பணத்தை காப்பறவாணர்கள் நிதிக்குச் செலுத்துவர்; அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை, வருமான வரி ஆணையாளரின் நிர்ணய அங்கிகரிப்பின் பேரில் விதிகளின் பிரகாரம் பைசல் செய்வதற்கு அங்கத்தவர் கணக்கில் வரவு வைக்கப்படும். இவ்வாறு வரவு வைக்கப்படும் தொகை, உப-விதி (X)யின் கீழ் சரண் செய்யப்பட்டபோது உடனுக்குடன் வரவு வைக்கப்பட்டதாகவே கணிக்கப்படும்; அல்லது பொலிஸி பூர்த்தியானல், நிதிக்குப் பணம் கிடைத்த உடனே வரவு வைக்கப்பட்டதாகவோ அல்லது அங்கத்தவர் இறக்க நேரிட்டால் அந்தக் கணமே வரவு வைக்கப்பட்டதாகவோ கணிக்கப்படும்.

## 17. வட்டி, இலாபம், நஷ்டம் மற்றும் நிர்வாக செலவினங்கள்

ஒவ்வொரு நிதி வருடத்தின் போதும் நிதிக்குக் கிடைக்கும் வட்டி விகிதங்களும், வருமானங்களும் வரவு வைக்கப்படும்; ஒவ்வொரு நிதி வருடத்தின் போதும் நிதி சம்பந்தப்பட்ட காரியங்களை கவனிக்கும் பொருட்டு குழுவினல் அல்லது காப்பறவாணர்களால் ஏற்பட்ட செலவினங்கள் அனைத்தும், நிதி வரவு செலவுக் கணக்கில் பற்றெழுதப்படும்.

## 18. அங்கத்தவர் கணக்கு

நிதி அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே கணக்கு வைக்கப்பட்டு, அன்னர் போடும் பங்குப் பணமும் அன்னரின் சார்பில் கம்பனி போடும் பங்குப் பணமும் அவரது கணக்கில் முறையே வரவு வைக்கப்படும். விதிகளின் பிரகாரம் அங்கத்தவர் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய அல்லது பற்றெழுதப்பட வேண்டிய

ஏனைய கணக்குகள் அனைத்தும் முறையே வரவு வைக்கப்படும் அல்லது பற்றெழுதப்படும்.

## 19. அங்கத்தவர் கணக்கு அறிக்கை

ஒவ்வொரு நிதி வருட முடிவின்போதும், அங்கத்தவரின் பெயரில் நிதியில் உள்ள கணக்குகள் பற்றிய விபரங்கள் அன்னாருக்கு சமர்ப்பிக்கப்படும் அல்லது தபாலில் அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட அல்லது தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட கணக்கு விபரங்கள் சம்பந்தமாக அங்கத்தவரிடமிருந்து ஒரு மாதத்திற்குள் ஆட்சேபனை எதுவும் கிட்டாத பட்சத்தில், கணக்குகள் சரியென்பதாகவே கணிக்கப்படும்.

## 20. அங்கத்தவர் பாத்தியமின்மை

விதிகளில் கூறப்பட்ட நியதிகளுக்கன்றி, எந்த அங்கத்தவரோ அல்லது அங்கத்தவர் வாயிலாக வேறு எவரேனுமோ நிதியிலிருந்து எவ்வகையான வருமதியோ அல்லது பணமோ கோருவதற்குப் பாத்தியம் கொண்டாட முடியாது; அன்றியும் எந்த அங்கத்தவரோ அல்லது அவருக்குப் பதிலாக வேறு எவரேனுமோ நிதியின் எந்தப் பகுதியையோ அல்லது எந்த முதலீட்டையோ அல்லது ஆங்கு கிட்டும் வருமானத்தையோ பாத்தியதை கொண்டாட முடியாது.

## 21. இருந்து வரும் நியமனதாரர்கள்

(அ) இந்த விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதிக்கு முன் அமுலிலிருந்த நிதியின் 10வது விதி உட்பட உப-விதிகள் (அ) தொடக்கம் (எ) வரையுள்ள நியதிகளின்படி முன் நியமித்த நியமனதாரர்கள் செல்லுபடியாவர்; ஆனாலும் இவ்விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதிக்கப்புறம் அங்கத்தவர் ஒருவர் புதிதாக நியமனஞ் செய்யவோ அல்லது ஏற்கனவே உள்ள நியமனதாரரை மாற்றவோ அல்லது தள்ளுபடி செய்யவோ ஆசைப்பட்

டால், அன்னர் 21 (ஆ) விதியின் பிரகாரம் அவ்வாறு செய்யலாம். ஆக 21 (ஆ) விதியின் நியமனங்களுக்கமைய செய்யப்படாத எந்த நியமனத்தையும், தள்ளுபடியையும் குழு அங்கீகரிக்க மாட்டாது.

நியமனதாரர்கள் 21 (ஆ) (i) 22வது விதியின் பிரகாரம் அங்கத்தவர் நிதியில் அங்கத்தவராக இருக்கும்போதே இறந்து விட்டால், அவருக்குரிய பணத்தை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு அங்கத்தவரும் அவ்வப்போது தங்களுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒரு நியமனதாரரின் பெயரையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் பெயர்களையோ பிரஸ்தாபிப்பர்.

(ii) அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நியமனமும் இரண்டாவது அட்டவணையில் குறிக்கப்பட்ட பாரத்திலோ அல்லது குழு குறிப்பிடும் ஏனைய பாரத்திலோ எழுத்து மூலம் நிரப்பி அங்கத்தவரின் கைச்சாத்திடப்பட்டு, குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும்.

(iii) (அ) அவ்வாறு செய்யப்படும் எந்த நியமனமும், மூன்ருவது அட்டவணையில் குறிக்கப்பட்ட பாரத்தில் அங்கத்தவரால் எழுத்து மூலம் நிரப்பப்பட்டு, கைச்சாத்திடப்பட்டு, குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டால், மேற்படி நியமனம் ரத்தாக்கப்படும் அல்லது தள்ளுபடி செய்யப்படும்: ஆனலும் அத்தகைய எழுத்துக் கோரிக்கை, அங்கத்தவர் தனது பிரதிநிதிகளாக முன்னம் ஏற்பாடு செய்த பல நியமனதாரர்களில் ஒருவரையோ அல்லது அதிகமானேரையோ (ஆனல் எல்லாரையுமல்ல) ரத்துச் செய்ய அல்லது தள்ளுபடி செய்யக் கோரினல்', பிரஸ்தாப எழுத்துக் கோரிக்கை, தள்ளுபடி செய்யவோ ரத்துச் செய்யவோ கோரும் தன்மையை இழந்து விடுவதோடு, குழுவின் அங்கீகாரத்தையும் இழந்துவிடும்.

(ஆ) அங்கத்தவர் ஒருவர் தனது திருமணத்திற்கு முன் செய்யப்படும் எந்த நியமனமும் அவர் திருமணத்திஞல் ரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

(iv) அங்கத்தவர் ஒருவரிஞல் செய்யப்படும் எந்த நியமனமும், விதிகளுக்கமைய மற்றுமொரு அல்லது புதிய நியமனத்தைக் கோரி குழுவிற்கு விண்ணப்பித்துக் கொண்டால், முன் நியமனங்கள் ரத்துச் செய்யப்பட்டதாக அல்லது தள்ளுபடி செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

(v) அங்கத்தவர் ஒருவர் இறக்கு முன் குழுவிற்குச் சமர்ப்பித்தாலன்றி, எந்த நியமன அல்லது தள்ளுபடி பாரம் செல்லுபடியாகவோ அல்லது ஏதேனும் நன்மை பயப்பதாகவோ ஆகமாட்டாது.

(vi) நியமனம் அல்லது தள்ளுபடி சம்பந்தமாக இடப்படும் அங்கத்தவரின் கையொப்பம், அன்ஞரின் நியமனதாரர்கள் அல்லாத இரு நபர்களால் சாட்சிப்படுத்தப்பட வேண்டும்; குழுவும் அத்தகைய விபரங்களை சரியா, பிழையா என்று ஆழ்ந்து ஆராயுமாஞல் சமர்ப்பிக்கப்பட்ட தஸ்தாவேஜின் பேரிலேயே செயல் புரியும்.

(vii) அங்கத்தவர் ஒருவர் பிராயமாகாத ஒருவருக்கு நன்மை செய்ய விரும்பிஞல், அவ்வங்கத்தவர் அவரது நியமனப் பாரத்தில் ஒரு நபரைச் (சாதாரணமாக அந்நபர் பிராயமாகாதவரின் பெற்ருேராக இருக்க வேண்டும்) குறிப்பிட்டு நியமனஞ் செய்யலாம். பிராயமாகாதவரின் காப்பறவாணராக இவர் கருதப்பட்டு, விதிகளின்படியும், நியமன நியதியின்படியும் பிராயமாகாதவருக்குக் கிட்டக்கூடிய பணமனைத்தும் பிரஸ்தாப நபருக்கே கொடுக்கப்படும். அவ்வாறு பணம் பெறும் நபர், நிதிசம்பந்தப்பட்ட பைசல் விஷயங்களுக்குப் போதுமான உரித்தாளியாவார். இவர் பிராயமாகாதவருக்குக்

கிட்டவேண்டிய பணங்களையும், வருமானங்களையும் பெற்று, குறிப்பிட்ட பிராயமாகாதவர் உரிய வயதை அடையும்போது சேர வேண்டியவற்றை அவருக்கு அளிப்பார். ஆயினும் இதுபற்றி குழுவிற்கு பொறுப்புக் கிடையாது. அங்கத்தவரானவர், எந்த சந்தர்ப்பத்தில் வேண்டுமானாலும், விதிகளுக்கமைய பிராயமாகாதவருக்கென தன்னால் நியமிக்கப்பட்டவரை, வேறொரு அல்லது புதிய அல்லது தள்ளுபடி மனுமூலம் நீக்கி வைக்கலாம். பிராயமாகாதவரின் நன்மையை உத்தேசித்து, நியமனப் பாரத்தில் குறிப்பிட்ட பங்கைப் பொறுத்தவரையில், பிராயமாகாதவரின் நன்மைக்கென நியமனப் பாரத்தில் குறிப்பிடப்பட்ட நபர் மேற்படி அங்கத்தவருக்கு முன்பே இறந்து போனால் அல்லது அங்கத்தவர் இறந்தநாளிலோ அல்லது பணம் செலுத்த வேண்டிய காலத்திலோ பிராயமாகாதவர் உரிய வயதை அடைந்து விட்டால், சம்பந்தப்பட்ட பிராயமாகாதவர் (காப்பறவாணர் அல்ல) பிரஸ்தாப பங்கைப் பெறும் சரியான நியமனதாரராகக் கருதப்படுவார்.

(viii) நியமனதாரர்களாக அமர்த்தப்படுவதற்குத் தகுதியான ஆட்கள்:—

(அ) கல்யாணமான அங்கத்தவரால், அன்னாரின் வாழ்க்கைத் துணை அல்லது உண்மையான பிள்ளை உட்பட அங்கத்தவரின் பிள்ளைகள் அல்லது பிராயமாகாத பிள்ளைக்கு காப்பறவாணராகஇருக்க (vii) உப-விதியின் கீழ் தகுதியுடைய எந்த நபரும்;

(ஆ) நியமன நேரத்தில் கல்யாணமாகாத ஒரு அங்கத்தவரால், எந்த நபர் அல்லது நபர்கள் அல்லது பிராயமாகாத பிள்ளைக்கு காப்பறவாணராக இருக்க (vii) உப-விதியின்கீழ் தகுதியுடைய எந்த நபரும்;

ஆனாலும் அங்கத்தவர் ஒருவரால் நியமிக்கப்பட்ட எந்த நபரும் தகுதியுடையவரா, அல்லவரா என்பதுபற்றி குழு ஆராயமாட்டாது.

(ix) ஒவ்வொரு நியமனதாரரும் முற்றிலும் விதிகளுக்கமைய நடாத்தப்படுவார். அங்கத்தவரால் ஒப்பமிடப்பட்ட நியமனப் பார நிபந்தனைகள் மற்றும் விதிகளின் கட்டுப்பாடுகளுக்கன்றி வேறு எக்காரணத்திற்கும் நியமனதாரர் பணம் பெறுவதற்கு உரித்தாளியாகமாட்டார். நியமனஞ் செய்த அங்கத்தவர் இறந்தாலன்றி, நியமனதாரர் பணத்திலிருந்து எவ்விதப் பணமும் பெற அருகதையாகமாட்டார்; மேலும் அங்கத்தவரின் இறப்பின் போது நியமனதாரர் கீழ்க்காணும் விதத்தில் மட்டுமே பணம்பெற அருகதையாவார்:—

(அ) அங்கத்தவர் நிதியில் இன்னும் ஒரு அங்கத்தவராகவே இருந்து கொண்டிருக்கும் வேளையில் நியமிக்கப்பட்டிருந்தால்,

(ஆ) அங்கத்தவர் இறப்பின்போது மேற்படி நியமனம் இன்னும் அமுலிலிருந்தால்,

(இ) பிராயமாகாதவருக்கென நியமிக்கப்பட்ட ஒரு காப்பறவாணரைப் பொறுத்த வரையில் அங்கத்தவர் இறப்பின்போதோ அல்லது பணம் பெறும் வேளையின்போதோ பிரஸ்தாப பிராயமாகாதவர் உரிய வயதை அடையாதிருந்தால்,

(x) நியமனத்தால் நிதிப் பணத்தைப் பெற உரித்துடைய அவரோ அல்லது அவளோ தங்கள் சொந்த நலத்திற்கு அத்தகைய பணத்தைப் பயன்படுத்தலாமெனினும், அது உப-விதி (vii)யின் பிரகாரம் ஈற்றில் அமுலாக்கப்படுதல் வேண்டும்.

## 22. மரணம்

கம்பனி சேவையில் இருக்கும்போதோ ஒரு அங்கத்தவர் இறந்துபோனால், குழுவானது விதிகளுக்

கமைய சம்பந்தப்பட்டவர் இறந்த திகதியில், அவர் பெயரில் வரவிருக்கும் பணத்தை நிதியிலிருந்து செலுத்தும்; அவ்வாறு செலுத்தப்படும் பணம் இதனடியில் குறிப்பிட்டவருக்கே வழங்கப்படும்:-

(அ) அங்கத்தவர் இறக்கும்போது, குறிப்பிட்ட நியமனம் அமுலிலிருக்குமானுல், அங்கத்தவரால் நியமிக்கப்பட்டவரும் உயிரோடு அதுவும் முழு வயதை அடைந்திருப்பவரானுல் அவருக்கே வழங்கப்படும்;

(ஆ) நியமனதாரரோ அல்லது நியமனதாரராகக் கருதப்படுபவரோ பிராயமாகாதவராக இருந்தால், அன்னரது சொத்தைப் பரிபாலிக்கும் காப்பாளருக்கே பணம் வழங்கப்படும். அங்கத்தவர் இறந்த ஆறு மாதத்திற்குள்ளோ அல்லது குழு அங்கீகரிக்கும் கால எல்லேக்குள்ளோ காப்பாளர் நியமிக்கப்படா விட்டால், பிராயமாகாதவருக்குச் சேர வேண்டிய பணத்தை, இலங்கை சேமிப்பு வங்கியில் அல்லது குழு அங்கீகரிக்கும் ஏதாவதொரு வங்கியில் அன்னரின் பெயருக்கு ஒரு கணக்கு திறக்கப்பட்டு அவர் வரவில் பணம் போடப்படும். இவ்வாறு பிராயமாகாதவரின் பெயரில் பணம் வங்கியில் முடக்கப்பட்டுவிட்டால் இவ்விஷயம் முற்ருக பைசலாகி விட்டதாகவே குழுவும் நிதியும் கருதும். மேலும் வங்கி டிப்பாஸிட் புத்தகத்தைப் பெற்று, முறையான விசாரணைக்குப் பின்னர், பிராயமாகாதவருக்குப் பாதுகாவலராக உள்ளவரிடம் அப்புத்தகத்தைச் சமர்ப்பிக்க (குழுவுக்குச் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இல்லாதபோதிலும்) குழுவுக்கு அதிகாரமுண்டு.

(இ) அங்கத்தவர் ஒருவர் இறக்கும் திகதியில் செல்லுபடியாகக் கூடிய நியமனம் இல்லாது போனுல் அல்லது நியமிக்கப்பட்டிருந்த ஒருவரோ

அல்லது எல்லா நியமனதாரர்களுமோ இறந்து போயிருந்தால், காலஞ்சென்ற அங்கத்தவரது சொத்தை ஆட்சி புரியும் பரிபாலகருக்குப் பணம் செலுத்தப்படும்; அப்படி பரிபாலகர் ஒருவர் இல்லாது போனால் அங்கத்தவர் சொத்துக்கு முறைப்படி நியமிக்கப்பட்ட நிர்வாகிக்குப் பணம் செலுத்தப்படும்; அப்படி சொத்து நிர்வகிக்கப் படாதுபோனால், நிர்வாக உரிமையைப் பெற காத்திருக்கும் நபர் அல்லது நபர்களுக்குப் பணம் செலுத்தப்படும். பரிபாலகரோ அல்லது நிர் வாகியோ அன்றியும் நிர்வாக உரிமை கோருவ தற்குப் பாத்தியதை யுடையவரோ இல்லாது போனால், காலஞ்சென்றவருக்குச் சேரவேண்டிய பணத்தைப் பெறுவதற்கு ஆறு மாத காலத்திற் குள் மனுச் செய்து கொள்ளலாம். அவ்வாறு மனுச் செய்து கொள்ளும் நபர் அல்லது நபர்களை நன்கு விசாரித்து அன்னார் காலஞ்சென்றவரின் உண்மையான வாரிசுகள் என்று நிர்ணயமானால் மட்டுமே குழு சம்பந்தப்பட்டவர்களுக்குப் பணம் வழங்கும். காலஞ்சென்றவரின் வாரிசுகளாக நபர் அல்லது நபர்களை நிர்ணயஞ் செய்து, அத்தகை யோருக்கு விகிதாசாரப்படி பணம் வழங்குவது சம்பந்தமாக குழு செய்யும் முடிவே இறுதி யானதாகும்.

காலஞ்சென்றவரின் வாரிசுகளாக நிர்ணயிக்கப் பட்ட நபர் அல்லது நபர்களுக்குப் பணம் செலுத் தப்பட்டதும், குழுவும் நிதியும் இது சம்பந்த மாகவுள்ள கடன் பொறுப்புகள் அனைத்தையும் பைசல் செய்துவிட்டதாகவே கருதும்.

## 23. இறப்பாலன்றி விலகிக்கொள்ளல்

(1) இறப்பாலன்றி வேறு எக்காரணத்தினாலோ கம்பனி சேவையிலிருந்து ஒரு அங்கத்தவர் விலகிக் கொண்டால், குழுவானது, விதிகளுக்கமைய உப-விதிகள் (ii) மற்றும் இவ்விதி (iii)ன் பிரகாரம்

நிதிக் கணக்கில், அவர் பெயரில் வரவிருக்கும் பணம் அனைத்தையும் கொடுத்துவிடும்.

(ii) அங்கத்தவர் ஒருவர் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டால், அவரை அங்கத்துவப் பதவியிலிருந்து விடுபடச் செய்து, அவருக்குச் சேரவேண்டிய தொகையினை, அன்னாரின் சொத்துக்கு முறைப்படி நியமிக்கப்பட்ட அதிபரிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

(iii) எக்காரணத்தாலோ வேலைக்குத் தகுதியற்றவரெனக் கருதி அங்கத்தவர் ஒருவரை கம்பனி சேவையினின்று விலக்கி, அது சம்பந்தமாக குழுவுக்கு அறிவிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட அங்கத்தவர் நிதி அங்கத்துவத்திலிருந்து விடுபட்டவராவார்.

(அ) கம்பனி சேவையினின்றும் அங்கத்தவர் விலக்கப்பட்டதற்குக் காரணமே சித்தசுவாதீனமென்றால், அவருக்குச் சேரவேண்டிய தொகை, அவரிலும் அவரது குடும்பத்தவர்களிலும் தீவிர அக்கறை கொண்டவர் என்று தீர விசாரிக்கப்பட்ட பின் தெரியவரும் உறவினர் கையில் ஒப்படைக்கப்படும். அவ்வாறு பணத்தைப் பெறும் உறவினர் அத்தொகையைப் பொறுப்பேற்றுக் கொண்ட காப்பறவாணராக இருப்பதோடு, அங்கத்தவருக்கும் அவரது குடும்பத்தினர் அல்லது மிக நெருங்கிய உறவினருக்கும் பராமரிப்புக்கு அல்லது நன்மைக்குத் தேவைப்படும் காரியங்களுக்கு அவ்வப்போது நேரிய வழியில் பணத்தைச் செலவிடுவார்; அங்கத்தவரின் உறவினர் பணத்தைப் பெற்றுக்கொண்ட மாத்திரத்தில், நிதி சம்பந்தப்பட்ட விஷயமனைத்தும் பைசலாகிவிட்டதாகவே கருதப்படும்;

(ஆ) மேற்படி வேலை நீக்கம் சித்தசுவாதீனத்தைத் தவிர்த்து வேறு எதற்குமாயின், அங்கத்

தவருக்குச் சேரவேண்டிய தொகை அவருக்கே வழங்கப்படும்.

## 24. மிகுதி சான்றிதழ்

அங்கத்தவர் ஒருவர், அங்கத்துவப் பதவியினின்றும் விலகிக்கொள்ளும் பட்சத்தில் கீழ்க்காணும் விதிகள் அனுஷ்டிக்கப்பட வேண்டும்:—

(i) நிதியின் முந்திய வருடக் கணக்கு சமர்ப்பிக்கப்பட்டு, மேலதிக தொகைப் பங்கீடு நிர்ணயிக்கப்படும் வருடாந்தர பொதுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னமே ஒரு அங்கத்தவர் விலகிக் கொண்டாரானல், அவரது கணக்கு முந்திய நிதி வருடத்தில் ஒரு வருமானமாக வரவு வைக்கப்பட்டு, அந்த நிதி வருட ஆரம்பத்தில் அவர் பெயரிலுள்ள கணக்கை நிர்ணயித்து, முந்திய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் ஒரு பங்கீட்டுத் தொகையைக் கணக்கிட்டு அத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும்;

(ii) எந்த வருடத்தின்போதும் வருடாந்தரப் பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு முன்போ அல்லது பின்போ ஒரு அங்கத்தவர் விலகிக் கொண்டால், அவரது கணக்கு அவர் விலகிக் கொண்ட நிதி வருடத்தில் ஒரு வருமானமாகவே வரவு வைக்கப்படும்; அத்துடன் இதுவும் சேர்த்துக் கொள்ளப்படும்:—

(அ) அந்த நிதி வருட ஆரம்பத்தில் அவரது கணக்கில் வரவாக விருக்கும் மிகுதிப் பணத்தின் மீது கணக்கிடப்படும் தொகை,

(ஆ) அங்கத்துவப் பதவியிலிருந்து விலகிக் கொண்ட முந்திய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதே பங்கீட்டுத் தொகை,

(ii) அங்கத்தவர் விலகிக் கொள்ளும் நிதி வருடத்தில் முடிவுற்ற காலத்திற்கு நிர்ணயிக்கப்படும் தொகை;

(iii) அங்கத்தவர் விலகிக் கொண்ட நாளில் அவர் பெயரில் வரவாகவிருந்த மிகுதிக் கணக்கு சம்பந்தமாக நிதிக் காரியதரிசியின் கையொப்பத்தினையோ அன்றியும் தலைவரால் நியமிக்கப்பட்ட வேறு எவரினதும் கையொப்பத்தினையோ கொண்ட ஒரு சான்றிதழ், இறுதியானதாகவும், விதிகளின் கீழ் அங்கத்தவரையும் மற்றும் பணம் பெறத் தகுதியுடைய எல்லா நபர்களையும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

## 25. மீள்வுரிமை

அங்கத்தவர் ஒருவர் கம்பனிச் சேவையினின்று விலகிக்கொண்ட நாளில், அன்னருக்கு கம்பனியினால் கடனோ அல்லது சம்பள முன்பணமோ வழங்கப்பட்டிருந்தால் அதனை அறவிட்டுக் கொள்ளும் பொருட்டு, நிதியில் அன்னவரின் பெயரில் வரவிருக்கும் தொகையில் எழுபத்தைந்து சத விகிதத்தி மேல் கம்பனி முதன்மை உரிமை பாராட்டும். ஆக சம்பந்தப்பட்ட அங்கத்தவர் ஒருவரிடமிருந்து கடன் வகையிலோ அல்லது முற்பணம் என்ற அளவிலோ கம்பனிக்கு இவ்வளவு தொகை வரவேண்டியுள்ளதெனக் குறிப்பிட்டு, கம்பனிக் காரியதரிசியினால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழை குழு ஏற்று (அங்கத்தவர் அல்லது வேறு எவரினதும் கணக்கைச் சரிவர பைசல்செய்ய குழுவுக்கு இது போதிய சான்றாகும்) விதிகளின் கீழ் அங்கத்தவருக்குக் கொடுபடவேண்டிய தொகையிலிருந்து, கம்பனிக்குச் சேரவேண்டிய தொகையைச் செலுத்திவிட்டு மிகுதிப் பணத்தையே அங்கத்தவருக்கோ அன்றியும் விதிகளின் பிரகாரம் பணம் பெறத் தகுதியுடைய வேறு எவரேனுக்குமோ கொடுக்கும்.

## 26. பறிமுதல் பொருள் முறிவு

(i) அங்கத்தவர் ஒருவர் நிதியில் தனது பெயரில் (அங்கத்தவர் பங்குப் பண கணக்காளுஞம்சரி, கம்பனி பங்குப்பண கணக்காளுஞம்சரி) வரவி லிருக்கும் பணத்தை அல்லது உரித்தை அல்லது ஏதேனுமொரு பகுதி பாத்தியதையை உரிமையாக் கவோ, மாற்றஞ்செய்யவோ, அடமானம் வைக் கவோ அல்லது வேறுவகையில் பயன்படுத்தவோ அல்லது பயன்படுத்த நினைக்கவோ முடியாது. அவ்வாறு செய்யும் எவ்வித பரிமாறலும் கொடுக் கல் வாங்கலும் செல்லுபடியாகாது; எவ்வித நன் மையும் பயக்காது. ஆகவே அத்தகைய பரிமாறல் அல்லது கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக விடுக் கப்படும் எவ்வித அறிவித்தலும், குழுவையும் காப்பறவாணர்களையும் கட்டுப்படுத்தவோ எவ்வித நன்மை விளைவிக்கவோ செய்யாது.

(ii) மேற்படி (i)வது உப-விதியில் குறிப்பிடப் பட்ட விதத்தில் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக அல்லது பரிமாறல் சம்பந்தமாக ஏதேனும் அறி வித்தல் குழுவிற்குக் கிட்டினுல் அல்லது அங்கத்தவ ரானவர் 16 (V) விதியை மீறினுல் அல்லது அங்கத் தவரது வரவிலிருக்கும் நிதிப் பணத்தை நிறுத்தி வைக்கவோ அல்லது நீதிமன்றத்திற்கு செலுத் தவோ கோரி நிதிக்கோ அல்லது குழுவிற்கோ அல் லது காப்பறவாணர்களுக்கோ தடை அறிவித்தல் அல்லது சட்டரீதியான அறிவித்தல் ஆதியன நீதி மன்ற நடவடிக்கை அறிவித்தல் ஆதியன தாக்கீது செய்யப்பட்டால் அல்லது அங்கத்தவரின் வரவி லிருக்கும் பணத்தை அவருக்கல்லாத வேருெரு வருக்குச் செலுத்தும்படி கோரி எந்த வகையான சட்டரீதியான அறிவித்தலும் குழுவிற்கோ, நிதிக் கோ அல்லது காப்பறவாணர்களுக்கோ கிட்டினுல் அல்லது அங்கத்தவருக்குப் பொருள் முறிவு ஏற் பட்டதாக தீர்ப்பளிக்கப்பட்டால் அல்லது பொருள்

முறிவுக்கு மனு தாக்கல் செய்திருந்தால் அல்லது அன்னாரின் கடன்காரர்களுடன் ஏற்றதொரு ஒழுங்கு செய்து கொண்டிருந்தால், அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் கீழ்க் காணும் நியதிகள் (16வது விதியின் நியதிகளோடு) அனுஷ்டிக்கப்படும்.

(அ) அங்கத்தவர் நிதி அங்கத்துவத்திலிருந்து உடனடியாக விலக்கப்படுவார்; இவ்விலக்கல், தொழில் ஆணையாளருக்கு அத்தியாவசிய நடவடிக்கை எடுப்பதற்கு அறிவிக்கப்படும்;

(ஆ) அங்கத்துவப் பதவியிலிருந்து விலக்கப்பட்ட திகதியில் அங்கத்தவரின் பெயரில் வரவிருக்கும் மிகுதிப் பணம் சம்பந்தமாக நிர்ணயஞ் செய்வதற்கு, 24வது விதி நியதிகள் அனுஷ்டிக்கப்படும்;

(இ) 25வது விதி நியதிகள் ஏற்ற சந்தர்ப்பங்களில் அனுஷ்டிக்கப்படும்;

(ஈ) அங்கத்தவரது அங்கத்தவர் பங்குப் பணத்தில் கணக்கிடப்பட்ட மிகுதிப் பணம் சட்டத்தின்படி நிர்ணயிக்கப்படும்;

(உ) அங்கத்தவரது கம்பனி பங்குப் பணத்தில் கணக்கிடப்பட்ட மிகுதிப் பணம், தொழில் ஆணையாளரின் தீர்ப்பின்படி பைசலுக்கு விடப்படும்; மற்றும்

(ஊ) மேற்படி உப-விதி (அ)யின் கீழ் அங்கத்தவர் அங்கத்துவப் பதவியிலிருந்து விடுபட்டுக் கொண்டால், அப்பேர்ப்பட்டவரின் சொந்த பங்குப் பணமும் வட்டியும் பறிமுதலாக்கப்படாமல், எந்த நீதிமன்றத்துக்கும் செலுத்தப்படாமல், வேறு எவரேனுக்கும் கொடுக்கப்படாமல், அல்லது அங்கத்தவரின் பொருள் முறிவு மற்றும் கடன்காரர்களோடு செய்யப்பட்ட இணக்கம் ஆதியன ரத்துச் செய்யப்பட்டோ அல்லது தள்ளுபடி செய்யப்பட்டோ விட்டால், பணமனைத்தும் (சட்டத்தால்

கோரப்படாத பட்சத்தில்) தொழில் ஆணையாளரின் ஆணைப்படி பைசல் செய்யப்படும்.

## 27. காலங் கடந்த பணங்கள்

நிதிக் கணக்குப் புத்தகத்தில் அங்கத்தவர் ஒருவரின் பெயரில் வரவிருக்கும் பணம் அனைத்தும் ஆறு வருடங்களாகக் கோரப்படாதிருந்தால், அவையனைத்தும் பறிமுதலாக்கப்பட்டு, குழு சரியெனநினைக்கும் விதத்தில் பரிபாலிக்கப்படும்; இதில் எந்த ஒரு பகுதியும் கம்பனிக்குச் செலுத்தப்படமாட்டாது.

## 28. கணக்குப் பரிசோதனை

நிதிக் கணக்குகள் யாவும் ஒவ்வொரு நிதி வருட முடிவிலும் சரி செய்யப்பட்டு, அதற்கப்புறம் கூடிய விரைவில், தொழில் ஆணையாளரின் அங்கீகாரம் பெற்ற கணக்குப் பரிசோதகர்களைக் கொண்டு பரிசீலிக்கப்படும்.

## 29. கூட்டங்கள்

குழுவானது, பரிசோதிக்கப்பட்ட ஒவ்வொரு நிதி வருடத்திற்குமுரிய கணக்குகள் கிட்டியதும், கூடிய விரைவில் வருடாந்தப் பொதுக் கூட்டத்தைக் கீழ்க் காணும் காரணங்களுக்காக கூட்டும் (அ) நிதி வருடத்திற்குரிய வரவு-செலவு கணக்குகள் மற்றும் ஐந்தொகைக் கணக்கு அத்துடன் கணக்குப் பரிசோதகர்களினதும் குழுவினதும் அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

(ஆ) 6 (V) விதியின் கீழ் குழுவினால், அங்கத்தவர் மத்தியில் பங்கிடுவதற்கு சிபார்சு செய்யப்பட்ட தொகையை அங்கீகரித்தல்.

(இ) தேர்வுக் குழு-அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுத்தல்.

(ஈ) வேறேதும் விடயங்களைப்பற்றி விவாதித்தல். தேர்வுக் குழு அங்கத்தவர்களைத் தேர்ந்

தெடுக்கும் முறை தலைவரால் முடிவு செய்யப்படும்; கூட்டத்திற்கு சமுகமளித்துள்ள அங்கத்தவர் ஒவ்வொருவரும் ஒரு அங்கத்தவரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு வாக்கைப் பிரயோகிக்கலாம். குழுவிற்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்க எந்த அங்கத்தவரும் ஒரு வாக்கிற்கு மேல் பிரயோகிக்கலாகாது.

(ii) ஒவ்வொரு பொதுக் கூட்டத்திற்கும் இருபத்தொரு நாட்களுக்கு முன்பே அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். அவ்வறிவித்தலில் கூட்ட நிகழ்ச்சி நிரல் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் நிதிக் கணக்குப் பிரதியொன்றும் இணைத்தனுப்பப்பட வேண்டும். அங்கத்தவர் எவரேனும் எந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்திலாவது ஒரு தீர்மானத்தைப் பிரேரிக்க உத்தேசித்திருந்தால், அதுபற்றி பொதுக் கூட்டத்திற்கு பதினான்கு நாட்களுக்கு முன்பே நிதிக் காரியதரிசிக்கு அறிவித்தல் கொடுக்க வேண்டும். காரியதரிசியானவர் பிரஸ்தாப உத்தேச பிரேரணையில் குறிக்கப்பட்ட வாசகத்தை, கூட்டத்திற்கு ஏழு நாட்களுக்குப் பிந்தாமல் அங்கத்தவர்களுக்கு அறிவிப்பார்.

(iii) குழுத் தலைவர் ஆணைப்படியோ அல்லது சபை ஆணைப்படியோ அல்லது குழுத் தீர்மானத்தின்படியோ அல்லது நிதி அங்கத்தவர்களில் ஐம்பது பேர்களுக்குக் குறையாதவர்களால் எழுத்து மூலம் விடுக்கப்படும் வேண்டுகோளின் பேரிலேயோ (இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் விசேஷ பொதுக் கூட்டத்தில் விவாதிக்கப்போகும் விஷயத்தைக் குறிப்பிட வேண்டும்) நிதிக் காரியதரிசியானவர் ஒரு விசேஷ பொதுக் கூட்டத்தைக் கூட்டுவார். 30வது விதியில் குறிக்கப்பட்ட பிரகாரம் கூட்டப்படவிருக்கும் விசேஷ பொதுக் கூட்டம்பற்றி குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்கூட்டியே அங்கத்தவர்களுக்கு அறிவிக்க வேண்டும்; தவிரவும்

அப்பேர்ப்பட்ட விசேஷப் பொதுக் கூட்டங்களில் குறிக்கப்பட்ட விஷயத்தைத் தவிர்ந்து வேறேதே னும் விவாதிக்கப்படலாகாது.

(iv) எந்தப் பொதுக் கூட்டம்பற்றியும் விடுக் கப்படும் அறிவித்தல் எழுத்து மூலம் கம்பனி காரியாலயத்திலுள்ள அறிவித்தல் பலகையில் (வழக்கமான ஊழியர்களுக்கான அறிவித்தல்கள் ஒட்டப்படுமிடம்.) ஒட்டப்பட வேண்டும். அவ் வாறு எழுத்துமூலம் விடுக்கப்படும் அறிவித்தலில் கூட்ட நேரம், திகதி, இடம், கூட்டத்திற்கான காரணம் ஆதியன குறிக்கப்பட வேண்டும். கொழும்பில் அல்லாமல் வேறு எங்காவது பணிபுரியும் கம்பனி ஊழியர்களுக்கு, குழு சரியென நினைக்கும் விதத்தில் பொதுக்கூட்டம்பற்றி அறிவித் தல் கொடுக்கப்படும்.

(v) எந்தப் பொதுக் கூட்டத்திலாவது எழுபத் தைந்து அங்கத்தவர்கள் சமுகந் தந்திருந்தால் கூட்ட நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு அது போதுமான கோரமாகும். கூட்டம் கூட்டப்பட்டு பத்து நிமிடங்களுக்குள் எழுபத்தைந்து பேர் சமுகந் தராது போனால் (அங்கத்தவர்களின் வேண்டுகோளின் பேரில் கூட்டப்பட்ட கூட்ட மானல்) கூட்டத்தைக் கலைத்துவிடலாம். ஆனல் வேறு எந்த வகையாயிருப்பினும் கூட்டத்தை அடுத்த வாரத்திற்கு இதே நாளில், இதே நேரத் தில், இதே இடத்தில் நடைபெறும் வண்ணம் ஒத்திப்போடலாம். அவ்வாறு ஒத்திப் போடப் பட்ட கூட்டம், அடுத்து நடைபெறும் வேளையின் போது கோரமிருந்தாலும் இல்லாவிட்டாலும் கூட்ட நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு தகுதி யுடையதாகும்.

(vi) எந்தப் பொதுக்கூட்டத்தின் போதும் நிதித் தலைவரோ அல்லது நியமனக் குழு அங் கத்தவராகசபையினுல் நியமிக்கப்பட்ட இயக்குநரோ

கூட்டத்திற்கு தலைமை வகிப்பார். ஒவ்வொரு தீர்மானமும் சமுகந்தரும் அங்கத்தவர்களின் கை உயர்வினுல் நிறைவேற்றப்படும். வாக்குகள் சரி சமதையாக எண்ணப்பட்ட சந்தர்ப்பங்களில், தலைவரானவர் அங்கத்தவராக இல்லாதபோதும் ஒரு வாக்கைப் பிரயோகிப்பார். ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டதாக தலைவர் பிரகடனஞ் செய்ய, அக்குறிப்பு நிதி நிகழ்ச்சிப் பதிவேட்டில் பதியப்படுமானுல் அது போதிய சான்ருகும்; தீர் மானத்திற்கு சாதகமாகவும், பாதகமாகவும் அளிக் கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை குறிக்கப்பட வேண்டிய அவசியமில்லை.

## 30. விதிகளுக்குத் திருத்தங்கள்

சபை, வருமான வரி இலாகா ஆணையாளர், தொழில் ஆணையாளர் ஆகியோரின் முன் அங்கீ காரத்துடன் எல்லா விதிகளையும் அல்லது எந்த விதி களையும் தள்ளுபடி செய்து அல்லது திருத்தஞ் செய்து, ஏற்கனவே உள்ள விதிகளோடு அல்லது ஒரு பகுதியோடு துணையாக அல்லது பதிலாக புதிய விதிகளை எந்தப் பொதுக் கூட்டத்திலும் வைத்து சேர்த்துக் கொள்ளலாம். இதற்குக் குறைந்தது பதினைந்து நாட்களுக்கு முன்பாவது அங்கத்தவர் களுக்கு அறிவிக்க வேண்டும். தவிரவும் கூட்டத் திற்கு சமுகந் தந்துள்ளவர்களில் ஐம்பத்தொரு விகிதத்தினரைக் கொண்டு நிறைவேற்றவும் வேண்டும். ஆனுல் கீழ்க்கண்டவைகள் சம்பந்த மாக எவ்வித மாற்றங்களோ, திருத்தங்களோ செய்யப்படலாகாது:

(i) குழுவினுல் முன்கூட்டி அங்கீகாரம் பெறப் படாதவை.

(ii) எவ்வகையிலும் அவர்களின் முன் அங்கீகா ரம் பெருதவை, திருத்தமோ அல்லது மாற்றமோ செய்யப்படும் திகதியில் நிதி அங்கத்தவர் எவரி

னதும் உரிமைகள் அல்லது சிரத்தைகளைப் பாதிப்புவை அல்லது நிதி அங்கத்துவப் பதவியினின்று விடுபட்டும், அற்றைத் திகதிவரை விதிகளின் பிரகாரம் பணம் பெறுமல் இருப்பவரின் ஒப்புதல் கிடைக்காதவை.

(iii) கம்பனியின் முன் அங்கீகாரம் இல்லாமல், கம்பனிமீது ஏதேனும் மேலதிக கடன் பொறுப்புகளை சுமத்துவது.

(iv) காப்பறவாணர்கள் அல்லது குழுவினரின் முன் அங்கீகாரம் இல்லாமலே ஏதேனும் தனிப்பட்ட கடன் பொறுப்புக்களை சுமத்துதல்.

(v) 25வது விதியில் குறிக்கப்பட்ட பிரகாரம் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய ஏதேனும் பணம்.

## 31. கலைத்தல்

(i) புனர் நிர்மானம் அல்லது இணைப்பு காரணமாக கம்பனியைக் கலைப்பதற்கு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், குழுவானது (சபை, வருமானவரி இலாகா ஆணையாளர், தொழில் ஆணையாளர் ஆகியோரின் அங்கீகாரத்துடன்) சூழ்நிலையை அநுசரித்து நிதியைத் தொடர்ந்து நடாத்தவோ அல்லது இப்போதைய நிதிக்குப் பதிலாக வேருெரு நிதியை (அங்கத்தவர்களுக்குப் பணத்தைப் பிரித்துக் கொடுக்காமலே) உருவாக்கவோ ஏற்ற ஒழுங்குகளைச் செய்யும்.

(அ) வேறு நிதி இப்போதைய நிதியில் அங்கத்தவர் அனுபவிக்கும் பயனில் எவ்விதத்திலும் குறைந்திருக்காது. (ஆ) நிதியின் பணங்களும் முதலீடுகளும் வேறு நிதிக்குச் செலுத்தப்பட்டு மாற்றப்படும்

(ii) மேற்படி உப-விதியில் குறிப்பிடப்பட்ட நியதிகளையல்லாமல் கம்பனியைக் கலைத்துவிட ஒரு தீர்மானம் மூலம் முடிவு செய்யப்பட்டால்,

குழுவானது நிதியைக் கலைத்துவிட முற்படும். இக்காரணத்திற்காக நிதி முதலீடுகள் அனைத்தை யும் விற்கச் செய்யும் (இவ்வுப-விதியின் கீழ் முழு அல்லது பகுதி உரிமைகளையாவது அனுபவிக்கும் வண்ணம், எந்த அங்கத்தவரினதும் அல்லது எல்லா அங்கத்தவர்களினதும் முதலீடுகளை மாற்ற ஏதுவாக இருந்தாலன்றி) நிதி கலைப்பு சம்பந்த மாக ஏற்படும் செலவினங்களைச் செலுத்திய பின் னர், அசல் பணங்களை அங்கத்தவர் மத்தியில் பிரித்துக் கொடுக்கும் பணியை (விதியின் கீழ் முறை யாக, பணம் பெறுவதற்கு தகுதியுடைய நியமன தாரர்களுக்கு அல்லது உரித்துள்ள இதர நபர் களுக்குக் கொடுக்கப்படும்). குழு செய்யும் தீர்மா னம் நிறைவேற்றப்பட்ட நாளில் அங்கத்தவர் பங்குப் பணத்திலும், கம்பனி பங்குப் பணத்திலும் வரவிருக்கும் மொத்த தொகையின் விகிதாசாரத் தின்படியே அசல் பணம் பிரித்துக் கொடுக்கப் படும். 16வது விதியின் பிரகாரம் அங்கத்தவர் ஒருவர் ஒரு இன்சூரன்ஸ் பொலிஸி எடுத்திருந்தால், பொலிஸி அங்கத்தவரின் செலவிலேயே அன்னாருக்கு மீண்டும் உரித்தாக்கப்படும். எந்த அங்கத்தவரோ அல்லது வேறேனும் நபரோ, தீர்மான நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ ஒரு குறிப்பிட்ட பணத்தை பெறுவதற்குப் பாத்தியதை உடையவ ரெனக் கண்டால், அத்தகையவருக்கு அத்தொகை மட்டுமே வழங்கப்படும்.

(iii) அங்கததவர்கள் அனைவரும் (சபையின் முன் அங்கீகாரத்துடனும், வருமான வரி இலாகா மற்றும் தொழில் ஆணையாளர் ஆகியோருக்கு ஒரு மாதத்திற்கு முன் விடுக்கப்பட்ட அறிவித்தலின் பேரிலும்) ஒரு விசேஷ பொதுக் கூட்டததைக் கூட்டி, நிதியைக் கலைப்பதற்கு ஒரு பிரேரணையைக் கொண்டுவந்து, சமுகந் தந்தவர்களில் மூன்ல்றி இரண்டு பங்கினருக்குக் குறையாதவர்களின் ஆதர

வுடன் நிறைவேற்றி வைக்கும்பட்சத்தில், நிதி கலைக்கப்பட்டுவிடும். அதற்குப் பின் எவரும் நிதியில் அங்கம் வகிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(iv) மேற்படி (iii)வது உப-விதியின் பிரகாரம் நிதியைக் கலைப்பதற்கு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டால், நிதிக் கலைப்பு சம்பந்தப்பட்ட விதிகள், முதலீடுகள், இன்சூரன்ஸ்கள் மற்றும் இதர விஷயங்களுக்கும் செல்லுபடியாகும்.

(v) நிதிக் கலைப்பு காரியங்களைக் கவனிக்கும் பொருட்டு, கம்பனி இயக்குநரையும் மற்றும் நிதி அங்கத்தவர்கள் இருவரை அல்லது வேறெனும் ஒருவரை கலைப்பாளர் அல்லது கலைப்பாளர்களாக சபையின் அங்கீகாரத்துடன் நியமிக்க நிதித் தலைவருக்குப் பூரண அதிகாரமுண்டு. அவ்வாறு நியமிக்கப்பட்டபின் எந்த வங்கியிலுமிருக்கும் நிதிக் கணக்கு மேற்படி கலைப்பாளர் அல்லது கலைப்பாளர்களால் நிர்வகிக்கப்படும். நிதிக்குச் செலுத்தப்படும் பணத்திற்கு கலைப்பாளர் அல்லது கலைப்பாளர்களால் வழங்கப்படும் ரசீது காப்பறவாணர்களுக்கும், ஏனையவருக்கும் போதுமான சான்றாகும். கலைப்பாளர்கள், தங்களால் வேண்டுமென்றே இழைத்த குற்றங்களுக்கன்றி, நிதிச் சொதுத்க்களை அறவிட ஏற்பட்ட செலவுகளுக்கும், கலைப்பு நிர்வாகம் சம்பந்தப்பட்ட கடன் பொறுப்புகள் அனைத்திற்கும் நிதிப் பணத்திலிருந்தே ஈடுசெய்வர்.

## 32. சட்டரீதியான கட்டணங்கள்

வருமானவரி இலாகா ஆணையாளரின் முன் அங்கீகாரத்துக்கன்றி, 21, 22, 23, 26 அல்லது 31வது விதிகளின் கீழ குழுவினுல் எவ்வித பணமும் கொடுபடக் கூடாது. விதிகளின்கீழ் பணம் எதுவும் கொடுபடுவதற்கு முன் குழுவானது தன்னைத் தானே திருப்திப்படுத்திக்கொள்ள (செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை) வேண்டும்—அவ்

வாறு சட்டரீதியான கட்டணமேதும் செலுத்தப்படவேண்டியுள்ளதாவென. அத்துடன் விதிகளின் கீழ் செலுத்த வேண்டிய நபர்களிடத்திலிருந்து பணத்தைக் கழித்துக் கொள்ளவும், சட்டரீதியான கட்டணத்தைக் கோரும் அரசாங்கத்துறைக்குச் செலுத்தி பைசல் செய்யவும் குழு முற்படும்.

## 33. கம்பனி ஆணைகள்

விதிகளின் கீழ் கம்பனிக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் அல்லது ஆணை மற்றும் விதிகளின் நிமித்தம் சபையின் ஆணைகள் ஆதியன, கம்பனி காரியதரிசி அல்லது உதவிக் காரியதரிசியின் கைச்சாத்துடன் எழுத்துமூலமிருப்பின் அவை அமுநி செய்யப்படுவதாகவே கருதப்படும்.

## 34. அந்தரங்கம்

எந்த குழு அங்கத்தவராலோ அல்லது நிதிக் காரியதரிசியினாலோ அல்லது நிதி விஷயமாக பணிபுரியும் சேவையாளராலோ, ஒருவரின் பங்குப் பணம் மற்றும் வரவுபற்றிய விபரம் வேறொருவருக்குக் கூறப்படலாகாது.

கொழும்பு,
25-7-63

# அங்கத்துவ விண்ணப்பப் பாரம்

முதலாவது அட்டவணை—விதி 8 (ii)

நிர்வாகக் குழுவிற்கு,

அஸோஸியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் சேமலாபநிதி .............................................ஆகிய நான் அஸோஷியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஆப் சிலோன் லிமிட்டெட் நிறுவனத்தில் 5ரு ஊழியனுகப் பணி புரிசிறேன்...............திகதி முதல் என்னையும் ஒரு அங்கத்தவனுக சேர்த்துக்கொள்ளும்படி இத்தால் விண்ணப்பித்துக் கொள்கின்றேன். 1963 யூலாய் 25ம் திகதி விதிகளின்படியும், இப்போது இருக்கும் விதிகளுக்குச் செய்யப்படும் திருத்தங்களின்படியும், அவ்வப்போது அமுலிலிருக்கும் நிதிவிதிகளின்படியும் எல்லா வகையிலும் ஒழுக நான் இணங்குகின்றேன்.

* 21 B விதிகளுக்கமைய இத்துடன் நியமனப் பாரத்தை இணைத்துள்ளேன்.

* நியமனம் செய்யாவிடில் நீக்கிவிடவும்.

....................................

(கையொப்பம்)

திகதி.....................

அங்கத்தவர் பதியப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளார்.

....................................

(கையொப்பம்)

திகதி.....................

# நியமனப் பாரம்

## இரண்டாவது அட்டவணை—விதி 21 B (ii)

நிர்வாகக் குழுவிற்கு,

அஸோஷியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் சேமலாபநிதி

மேற்படி விதியின் 21 B விதியின் பிரகாரம் ..........................................ஆகிய நான், இத்தால் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களினால் நன்மையடையும் பொருட்டு, விதிகளின் கீழ் அடியிற் கண்ட நபரை/நபர்களை எனது நியமனதாரர்(கள்) ஆக நியமிக்கிறேன்:-

நியமனதாரரின் பெயர்.................................

எனக்கு உறவுமுறை....................................

நியமனதாரரின் வயது (அல்லது நன்மையடைபவரின் வயது)..........................

விகிதம்.......................

*.........................* யாருமில்லை

வேண்டாத இடத்தில் விட்டுவிடவும்.

(பிராயமடையும் வரை................................ காப்பறவாணர்)

(நன்மையடைபவர் எனது............................)

*.........................* யாருமில்லை.

(பிராயமடையும்வரை................................ காப்பறவாணர்)

(நன்மையடைபவர் எனது............................)

எந்த நியமனதாரரும் (அல்லது ஒரு பிராய மாகாதவருக்கு காப்பறவாணராக நியமிக்கப்பட்ட ஒருவர்) எனக்கு முன் இறந்துவிட்டால், சுமரும் விகிதமுட்பட நியமனதாரர் அல்லது நன்மை யடைபவருக்குக் குறிக்கப்பட்ட விகிதத்தை, அவர் அல்லது அவள் இறப்புக்குப் பின் ஒருவ ராயின், எஞ்சியுள்ள நியமனதாரருக்கும் ஒன்றுக்கு அதிகமயயின், எஞ்சியுள்ள நியமனதாரர் களுக்கு மத்தியிலும் என் இறப்பின்போது விகிதா சாரப்படி அனுபவிக்கலாம்; சுமரப்பட்ட பங்கைப் பெறும் நியமனதாரர் பிராயமாகாத ஒருவருக்கு காப்பறவாணராக இருப்பின், பூர்வாங்க பங்கைப் போல நன்மையடைபவரின் நலங் கருதி அப்போர்ப் பட்ட பங்கை தமது பொறுப்பில் வைத்திருப்பார்.

சாட்சிகள்: திகதி............196 .

(1) ....................................

(2) ....................................

நிதிப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

...............................(திகதி)

.........................................(காரியதரிசி)

...............................(திகதி)

# நியமனத்தை ரத்துச் செய்தல்

மூன்றாவது அட்டவணை—விதி 21 B (iii) (அ)

நிர்வாகக் குழுவிற்கு,

அஸோஸியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் சேமலாப நிதி

மேற்படி நிதியின் விதிகளுக்கமைய என்னால் நியமிக்கப்பட்ட நியமனத்தை/நியமனங்களை இத்தால் ரத்துச் செய்து, தள்ளுபடி செய்கின்றேன்.

திகதி.....................196 .

....................................

(கையொப்பம்)

நிதிப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

............................(திகதி)

......................................(காரியதரிசி)

# அஸோஷியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் சேமலாபநிதி ஒப்பீட்டு அட்டவணை

| இருக்கும் விதிகள் | | புதிதாக வரைந்த விதிகள் திகதி 25—1—61. | |
|---|---|---|---|
| (1) | 2 | (1) | 4 |
| (2) | 3 | (2) | 2 |
| (3) | 4 | (3) | 3 |
| (4) | 5 | (4) | 8 |
| (5) | 6 | (5) | 9 |
| (6) | 7 | (6) | 8 (111) |
| (7) | 8 | (7) | 8 (111), 23 மற்றும் 24 |
| (8) | 9 | (8) | 17 (11) |
| (9) | 10 | (9) | 21 அ மற்றும் 21 ஆ |
| (10) | 11 | (10) | இல்லை |
| (11) | 12 | (11) | 15 |
| (12) | 13 | (12) | 16 |
| (13) | 14 | (13) | 26 |
| (14) | 15 | (14) | 25 |
| (15) | 16 | (15) | 5 |
| (16) | 17 | (16) | 6 |
| (17) | 18 | (17) | 24 (1) மற்றும் (11) |
| (18) | 19 | (18) | 7 |
| (19) | 20 | (19) | 13 |
| (20) | 21 | (20) | 14 |
| (21) | 21 (ஈ) | (21) | 12 |
| (22) | 22 | (22) | 34 |
| (23) | 23 | (23) | 29 |
| (24) | 24 | (24) | 29 |
| (25) | 25 | (25) | 29 |
| (26) | 26 | (26) | 13 (V) |
| (27) | 27 | (27) | 17 (1) |
| (28) | 28 | (28) | 30 |
| (29) | 29 | (29) | 31 |

கொழும்பு. 25—1—1961.

V. Sa. Be[illegible]

[illegible]